பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 16 வெள்ளிக்கிழமை 29.01.2021 கதிர் 85

இனி இது ரகசியம் அல்ல!

இந்தியாவுக்கும் கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கும் இடையில் துளிர்விட்டு வரும் புதிய நல்லுறவு ஊடாட்டம் பற்றிய செய்திதான் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இப்போது பிரதான பேசு பொருளாக இருக்கின்றது.

இந்தியா பக்கம்02 »

# அரசின் அராஜக செயல்களுக்கு எதிராக ஓரணியில் திரள்வோம்!



## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்துக்குத் தமிழ்க் கூட்டமைப்பு பேராதரவு

யாழ்ப்பாணம், ஜனவரி. 29

வடக்கு, கிழக்கில் அரசின் அராஜக செயல்களைக் கண்டித்து ஜனநாயக ரீதியில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ☞2

## ஆயிரம் ரூபாவைக் கொடு; இல்லையேல் வெளியேறு!

### இ.தொ.காவுக்கு மனோ எச்சரிக்கை



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக் கொடுக்க ☞11

## அமெரிக்காவின் அழுத்தத்துக்கு ஒருபோதும் அடிபணியமாட்டோம்


### கோட்டா அரசு திட்டவட்டம்

ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தின் அழுத்தங்களுக்கு இலங்கை ஒருபோதும் அடிபணியமாட்டாது. ஜோ பைடன், தமது நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முதலில் கவனம் செலுத்த வேண்டும். அதை விடுத்து பிற நாட்டு விடயங்களில் அவர் தலையிடக் கூடாது.



– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகு ஜன ஊடகத் துறை அமைச்சருமான ☞2

## மூத்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா நேற்று காலமானார்



இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை மாத இதழின் ஆசிரியருமான டொமினிக் ஜீவா நேற்று மாலை ☞2

## விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை போராட்டம்

### வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு

வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம்பொலிகண்டிவரையான கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

எதிர்வரும் 3 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை மேற்கொள்ளவுள்ள இந்தப் போராட்டம் தொடர்பில் சிவில் சமூக ☞11

## போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களின் சுகவீன விடுமுறைக்கு சம்பளம் வெட்டு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 18 ஆம் திகதி ஆளுநர் செயலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களின் அந்தத் தின விடுமுறையை சம்பளமற்ற விடுமுறையாக கணிக்குமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று ☞2

## முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் வளாகத்தில் 146 எறிகணைகள் நேற்று மீட்பு!

(ந.லோகதயாளன்)

முள்ளியவளை வித்தியானந் தாக் கல்லூரியின் வளாகத்தில் இருந்து 146 ☞2






## 297 ஆக உயர்ந்தது கொரோனாச் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 61 வயதான கைதி ஒருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டதை அடுத்து, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அவர் கடந்த 16ஆம் திகதி உயிரிழந்துள்ளார். ☞2

## வடக்கு மாகாணத்தில் நேற்று 7 பேருக்கு கொரோனா உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 7 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ☞2

## மேலும் ஐந்து மாணவருக்கு கல்முனையில் தொற்றுறுதி



கல்முனை சுகாதாரப் பிராந்தியத்திலுள்ள காரைதீவில் மேலும் ஐந்து மாணவருக்கு ☞2

## நேற்று மாத்திரம் 892 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

கொழும்பு, ஜன.29

இலங்கையில் நேற்று மாத்திரம் 892 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 61 ஆயிரத்து 586 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 54 ஆயிரத்து 435 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 854 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அன்பளிப்பாக வழங்கிய கோவிட் – தொற்றுத் தடுப்பூசி நேற்று இலங்கைக்குக் கிடைத்தது. இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயிடமிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து அதனை சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே நேரில் பிரசன்னமாகி பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதேசமயம், 'தொற்றுத் தடுப்பூசி மூலமான நட்புறவு' என்ற சாரப்பட பெரிய விளம்பரங்கள் நேற்று சிங்கள, ஆங்கிலப் பத்திரிகையில் எல்லாம் தாராளமாக பிரசுரமாகின.

இந்தியாவுக்கு இத்துணை ஆரவாரம் எல்லாம் வெறுமனே கோவிட் தடுப்பூசி அன்பளிப்பாக வழங்கப்படுகின்றது என்ற அபிமானத்தால் எழுந்தது அல்ல.

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் நிராதரவாக நிற்கும் இலங்கை, குறைந்தபட்சம் இந்தியாவின் ஆதரவை வளைத்துப் போட்டாவது மீண்டுவிடலாமா என்ற நப்பாசையில் காய் நகர்த்துகின்றது. அதன் ஒரு கட்டம் தான் இந்தியாவைத் தலையில் வைத்துக் கொண்டாடும் கொழும்பின் நடிப்பு.

அதன் இன்னொரு அங்கம்தான் கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும், இந்தியாவிடம் தாரை வார்க்கும் தாராளம்.

இப்படி அந்த முனையத்தை இந்தியாவுக்குக் கையளிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் வரும் திங்கட்கிழமை கூடவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு வருகின்றது. பதவி ஆசையால் தம் பதவியைப் பற்றிப் பிடித்திருக்கும் அமைச்சர்கள், திங்கள் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் அந்தத் திட்டத்தை எதிர்க்கப் போவதில்லை. ஆனால் அந்தத் திட்டம் செயற்படுத்தப்படப்போகின்றது என்ற தகவல் அந்த அமைச்சரவை கூட்டத்துடன், பகிரங்கமாகி அம்பலமாகும். அத்துடன் தெற்கில் பூகம்பம் வெடிக்கும். அதை கோட்டா அரசு எப்படிக் கையாளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இதற்கிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்தியத் தூதவர் கோபால் பாக்லேயை அழைத்து சுமார் இரண்டு மணி நேரம் அவருடன் விரிவாக உரையாடினார் என்று கொழும்பில் அரசியல் வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் வரும் பெப்ரவரி – மார்ச் மாத அமர்வையொட்டி இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சர்வதேசத் தரப்புகளின் நகர்வுகளை முறியடிப்பதற்கு இலங்கைக்கு உதவுமாறு இந்தியத் தரப்பிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விநயத்துடன் இறைஞ்சினார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயங்களை ஒட்டி இந்தியாவின் பிரதிபலிப்பு எப்படி அமையும், எத்தகைய எதிர்வினையை புதுடில்லி காட்டும் என்பவை எல்லாவற்றையும் சர்வதேசத் தரப்புகள் உன்னிப்பாக அவதானித்துக் காத்திருக்கின்றன.

இதற்கிடையில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தரப்புக்கு ஆதரவாகச் செயற்படும். 'லங்கா லீட்', 'லங்கா சி நியூஸ்' போன்ற இணையத் தளங்கள் அதிரடிச் செய்தி ஒன்றை மெல்லக் கசிய விட்டிருக்கின்றன.

விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி போல ஜே.வி.பியிலிருந்து பிரிந்த இன்னொரு அணிக்கு உபுது ஜெயக்கொட தலைமை வகிக்கின்றார். அவர் தமது கட்சி உறுப்பினர்களுக்கான மாநாடு ஒன்றில் ஆற்றிய உரையின் சாரம்சத்தையே விமல் வீரவன்ஸ ஆதரவு இணையத் தளங்கள் செய்தியாக்கியுள்ளன.

*"கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம், காங்கேசன்துறைத் துறைமுகம், பலாலி விமான நிலையம் ஆகிய மூன்றையும் இந்தியாவுக்குத் தாரை வார்ப்பதற்குக் கொழும்பு இணங்குமானால், புதிய அரசமைப்பு உருவாக்கத்தின் போது மாகாணசபை முறைமை ஒழிக்கப்படுவதை புதுடில்லி கண்டும் காணாமலும் பார்த்து இருக்கும். அதுவே இந்தியாவின் இப்போதைய நிலைப்பாடு. அதை இலங்கைத் தரப்புக்கு உரிய வட்டாரங்கள் மூலம், உரிய முறையில் இந்தியா தெரியப்படுத்தியுள்ளது."* – என்று உபுது ஜெயக்கொட கூறினார் என வெளியான செய்தி சிங்கள அரசியல் ஆர்வலர்கள் மத்தியில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இந்தியா இலங்கைத் தமிழர்களுக்காக – நீதிக்காக – நியாயத்துக்காக – நிற்குமா? அல்லது தனது பூகோள அரசியல் நலன்களை எட்டுவதற்காக ஈழத்தமிழர் மீதான தனது அபிமானம் என்ற தன் கொள்கையை விலைபேசுமா?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

– மின்னல் –

## முள்ளியவளை வித்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எறிகணைகள் நேற்று படையினரால் மீட்கப்பட்டன. கல்லூரி வளாகத்தில் கடந்த 25ஆம் திகதி மேற்கொண்ட பணியின் போது சில வெடி பொருள்கள் அவதானிக்கப்பட்டதால் இந்த விடயம் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதை அவதானித்த பொலிஸார் நீதிமன்றின் அனுமதியைப் பெற்று படையினர் மூலம் நேற்று நிலம் தோண்டப்பட்டு தேடுதல் மேற் கொள்ளப்பட்டது.

இந்தத் தேடுதலின்போது பெருந்தொகையான வெடி பொருள்கள் படையினரால் மீட்கப்பட்டன. இவ்வாறு மீட்கப்பட்டவை அனைத்தும் எறிகணைகளாகவே காணப்பட்டன.

இதன்போது 146 வரையான எறிகணைகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## 297 ஆக உயர்ந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்தரமுல்ல பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஆண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், கடந்த 21ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு – 06 ஐச் சேர்ந்த 67 வயதான பெண் ஒருவர் தனியார் வைத்தியசாலை ஒன்றில் கடந்த 24ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு – 06 ஐச் சேர்ந்த 86 வயதான ஆண் ஒருவர் இம்தேபான மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கடந்த 26ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு – 13 ஐச் சேர்ந்த 61 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலிருந்து, முல்லேரியா ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி – கல்லேல்ல பகுதியைச் சேர்ந்த 76 வயதான பெண் ஒருவர், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.

நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 73 வயதான ஆண் ஒருவர், தனது வீட்டில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 297 ஆக அதிகரித்துள்ளது.

## போராட்டத்தில் ஈடுபட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வன்னியில் கடமையாற்றும் ஆசிரியர்கள் 6 வருடங்கள் நிறைவு பெறுகின்றபோதும் தமது சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கவில்லை என கடந்த 18ஆம் திகதி அவர்களில பலர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் அனைவரும் தாம் கடமையாற்றும் படசாலைகளிற்கு சுகயீன விடுமுறை அறிவித்தலையும் அனுப்பி வைத்திருந்தனர்.

இவற்றினை ஆராய்ந்த மாகாண கல்வி அமைச்சு நிர்வாக கோவையின் பிரகாரம் சலுகையாக வழங்கப்படும் ஒரு விடுமுறையைப் பெற்று அந்த விடுமுறைக்கு சுகயீனத்தை காரணமாக காண்பித்த போதிலும், அவர்கள் மாகாண ஆளுநர் செயலகம் முன்பாகவும் மாவட்டச் செயலகம் முன்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆகையால் அவர்கள் அனைவரதும் அந்த விடுமுறைய சம்பளம் அற்ற விடுமுறையாக கணிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களிற்கு எழுத்தில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளரது இந்த கடிதம் தற்போது வலயக் கல்விப் பணிப்பாளரால் பாடசாலை அதிபர்களிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. இதனால் 18ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டோர் தமது ஒரு நாள் வேதனத்தை இழக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது.

## அரசின் அராஜக செயல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்களின் அழைப்புக்கிணங்க முன்னெடுக்கப் படவுள்ள இந்தப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஆதரவை வழங்குகின்றது எனக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்றிரவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தமிழ் மக்கள் மீது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. அதேவேளை, திணைக்களங்கள் ரீதியான ஆக்கிரமிப்பும் தொடர்கின்றது. இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கில் செயற்படும் சிவில் அமைப்புக்கள் பல இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் எமது ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடக்கு, கிழக்கில் உள்ள பாரம்பரிய இந்து ஆலயங்களைக் கையகப்படுத்துவதற்கான அரசின் முயற்சிகள் தொடர்கின்றன. அதேவேளை, முஸ்லிம் சகோதர இனத்தின் மத, கலாசார, பண்பாட்டு உரிமைகள் மீதும் அரசு கைவைத்துள்ளது. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோரை அரசு அச்சுறுத்தியும் வருகின்றது.

தமிழ்பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றங்களை அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்பேசும் மக்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அழிக்கும் வகையில் அரசு கங்கணம் கட்டிச் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

அரசின் இந்த அராஜக செயல்களைக் கண்டித்து ஜனநாயக ரீதியில் இடம்பெறும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு எமது முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் போராட்டத்தில் தமிழ்பேசும் தரப்பினர் அனைவரும் பங்கேற்க வேண்டும் எனத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் அழைப்பு விடுக்கின்றோம் – என்றுள்ளது.

## வடக்கு மாகாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இருவரும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐவரும்

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

## மேலும் ஐந்து...

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பிணிமனையின் நேற்றைய கள நிலைவர அறிக்கையில் இவ்விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காரைதீவிலுள்ள பாடசாலையொன்றில் இரு மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, தொற்றுக்குள்ளான மாணவர்களுடன் நெருங்கிப் பழகிய 32 மாணவர்கள், கடந்த திங்கட்கிழமை சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று முன்தினம் கிடைத்த இந்தப் சோதனை முடிவுகளின்படி அந்த 32 பேரில் மூன்று மாணவர்களுக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

அவர்களை சிகிச்சை நிலையத்துக்கு சுகாதாரத் துறையினர் அழைத்துச் சென்றுள்ளமையுடன், அம்மாணவர்களது வீட்டிலுள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏற்கெனவே கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்ட தாதிய உத்தியோகத்தரது பிள்ளைகள் இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் காரைதீவின் இரு பிரபல பாடசாலைகளைச் சேர்ந்தவர்களாவர். இம்மாணவர்களும் சிகிச்சைக்காகக் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மாணவர்களிடையே கொரோனா தொற்றும் அதனைத்தொடர்ந்த சோதனைகள் அனைத்தும் பெற்றோரிடையேயும் மாணவரிடையேயும் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

இதனால் செவ்வாய்க்கிழமை முதல் காரைதீவிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் மாணவரின்றி வெறிச் சோடிக் காணப்படுகின்றன. அநேகமான பாடசாலைகளில் 10 சதவீதத்துக்கும் குறைவான மாணவர்களே வருகை தருகின்றமையுடன், ஆசிரியர்களின் வருகையும் வீழ்ச்சியடைந்துள்ளதால், கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

காரைதீவுப் பிரதேசத்தில் இதுவரை 69 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்டுள்ளதுடன், சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்தி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்திருக்கிறது.

## அமெரிக்காவின்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

'இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என ஆராய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ் நியமித்துள்ள புதிய ஆணைக்குழுவால் அனைத்தும் முறையாக நடந்துவிடப்போவதில்லை. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகமும் மனித உரிமை விவகாரங்களில் இலங்கைக்குத் தொடர்ந்தும் அழுத்தங்களை வழங்கும். ஆட்சி மாறினாலும் அமெரிக்காவின் கொள்கைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படாது' என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் தற்போதைய ஆட்சியில் மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்கள் மீறப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி நியமித்துள்ள புதிய ஆணைக்குழு ஆராய்ந்து நிரூபித்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை இந்த அரசு வழங்கியே தீரும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்காவோ அல்லது வேறெந்த நாடுகளோ தலையிட முடியாது.

அமெரிக்காவின் எல்லை மீறிய நடவடிக்கைகளால்தான் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை நெருக்குவாரங்களைச் சந்திக்க வேண்டி வந்தது.

இம்முறையும் அமெரிக்காவின் நட்பு நாடுகள் இலங்கை மீது மேலும் நெருக்குவாரங்களைப் பிரயோகிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும், இலங்கையின் நட்பு நாடுகள் இதனை எதிர்க்கும். இலங்கையும் தமது நிலைப்பாட்டை ஜெனிவாக் கூட்ட அமர்வில் தெளிவாக எடுத்துரைக்கும் – என்றார்.

## மூத்த எழுத்தாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தனது 94 வயதில் கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட டொமினிக் ஜீவா, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர உறுப்பினராவார்.

இவர் இலக்கிய ஈடுபாடு காரணமாக 1966 இல் மல்லிகை இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்தார். தொடர்ச்சியாக 49 வருடங்களாக அதனை நடத்தினார்.

இலங்கையில் முதல் சாகித்திய விருது பெற்ற தமிழ் எழுத்தாளர் என்ற பெருமையைப் பெற்ற டொமினிக் ஜீவா, மூன்று சிறுகதைத் தொகுதிகளையும், தனது சுயசரிதையை இரண்டு பாகங்களாகவும் எழுதி வெளியிட்டுள்ளார்.

அன்னாரின் மறைவு ஈழத்து இலக்கிய உலகுக்கோர் பேரிழப்பாகும். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# பேக்கரி உணவுப்பொருள்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்!

பாண் உட்பட பேக்கரி உற்பத்தி பொருள்கள் அனைத்தினதும் விலை அடுத்த மாதம் முதல் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் வரிக் குறைப்பை மேற்கொண்டால் மாத்திரமே விலை அதிகரிப்பை தவிர்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பேக்கரி உற்பத்திப் பொருள்கள் ஒரு சில கடைகளில் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

# பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் கீழ் உள்ள 16 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி!

வவுனியாவில் மேலும் 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கடந்த புதன்கிழமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைப்பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட ஒருவருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட ஏனையவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு, முடிவுகள் கடந்த புதன்கிழமை வெளியாகியிருந்தன.

இதனடிப்படையிலேயே பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்ட 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று வியாழக்கிழமை பயங்கரவாதத் தடுப்பு பிரிவினருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ‘எல்லாம் கடந்து போகும்’ குறும்படம் மன்னாரில் புதன் வெளியிடப்பட்டது!



மன்னார் ஊடக நண்பர்களின் பேராதரவுடன் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் இயக்கத்தில் உருவான ‘எல்லாம் கடந்து போகும்’ குறும்படம், கடந்த புதன்கிழமை மாலை மன்னார் ஆஹாஸ் விடுதியில் வெளியீடு செய்யப்பட்டது.

குறித்த குறும்படம், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு இந்தக் குறும்படத்தை வெளியீடு செய்தனர்.

குறும்பட வெளியீட்டு நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் இயக்கத்தில், உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும் தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வை இன்றைய சமூகங்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையிலும் இந்தத் குறும்படம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடன் ஒத்துழைத்து இலங்கை செயற்படவேண்டும்!

## கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்தல்



இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் ஒத்துழைத்து செயற்படுவதுதான் பொருத்தமாக இருக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு இலங்கை அரசு வழங்குவது தொடர்பாகத் தமிழ்த் தேசிய முன்னணியின் நிலைப்பாடு தொடர்பாக வவுனியாவில் ஊடகவியலாளர் எழுப்பிய வினாவிற்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இந்தியா இலங்கையினுடைய அயல்நாடாக இருக்கின்றது. எங்களைப் பொறுத்தவரை இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு நலன்களிலே மிகுந்த அக்கறை இருக்கின்றது.

இந்தியாவினுடைய தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்ற விதமாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் துணை போக மாட்டோம்.

இலங்கையில் பல இடங்களிலே சீனாவிற்கு இடம்கொடுக்கப்பட்டிருக்கின்ற சூழலிலே இந்தியா தனது ஆதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்த இடத்தில் இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதுதான் பொருத்தமாக இருக்கும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கையிலும் உருமாறிய புதிய வைரஸ் தொற்று தடுப்பு செயற்திட்டங்களை ஸ்திரப்படுத்த வேண்டும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

ஐரோப்பிய நாடுகளில் இனங்காணப்பட்ட உருமாறிய புதிய வைரஸ் இலங்கையிலும் காணப்படுகிறது என்பதை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, இலங்கையில் கொவிட் தடுப்பு செயற்திட்டங்கள் மேலும் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

உருமாறிய வைரஸ் பரவலின் தன்மை இலங்கையிலும் காணப்படுவதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவத்துறை பணியகம் தெரிவித்துள்ளதோடு அதுதொடர்பாக அறிக்கையும் சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனவே, அது தொடர்பில் சுகாதார அமைச்சு மக்களை தெளிவூட்ட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

ஐரோப்பிய நாடுகளில் இனங்காணப்பட்ட உருமாறிய புதிய வைரஸ் இலங்கையிலும் காணப்படுகிறது என்பதை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, இலங்கையில் கொவிட் தடுப்பு செயற்றிட்டங்கள் மேலும் விஸ்திரப்படுத்தப்பட வேண்டும். தனிமைப்படுத்தலிலுள்ள நபரொருவரிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளின் ஊடாகவே இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் அங்கிருந்து சென்றவர்களிடமும் மாதிரிகளைப் பெற்று பரிசோதித்து துரிதமாக முடிவுகளை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறில்லை என்றால் கால தாமதமாக அதன் முடிவுகள் கிடைக்குமானால் எதிர்வரும் காலங்களில் பாரிய அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும். அத்தோடு புதிய வைரஸ் சமூகத்திற்குள் பரவக் கூடிய அபாயமும் ஏற்படும்.

கொழும்பிற்கும் அப்பால் காலி உள்ளிட்ட பகுதிகளில் முதியோர் இல்லத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொவிட் பரவலைப் பொறுத்தவரையில் முதியோர் மிக அவதானமாக இருக்க வேண்டியோராவர். எனவே, இவ்வாறான முதியோர் இல்லங்களைத் தேர்ந்தெடுத்து பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

தற்போது சுகாதார தரப்பினரும் தொற்றுக்குள்ளாகும் வீதம் அதிகரித்துள்ளது. இவ்வாறு தொற்றுக்கு உள்ளாகுபவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் அதேவேளை , அவர்களுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். எனவே, சுகாதாரத்துறையில் பெருமளவானோர் சேவையை முன்னெடுக்க முடியாத நிலையிலுள்ளர். இந்த நிலைமை தொடருமாயின் சுகாதாரக் கட்டமைப்பு வீழ்ச்சியடையக் கூடும். எனவே, இது தொடர்பில் சுகாதார அமைச்சு முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். – என்றார்.

# யாழில் விபத்து ஒருவர் சாவு!




யாழ். நெல்லியடி பகுதியில் வேகக் கட்டுப்பாட்டையிழந்த கப் வாகனம் விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேநேரம், மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நெல்லியடி நகர் மக்கள் வங்கிக்கு முன்பாக நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது

இந்த விபத்தில், கரைவெட்டி வதிரியைச் சேர்ந்த பேர்னாட் கரன் (வயது – 41) என்பவரே உயிரிழந்துள்ளார். இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கிழக்கு முனைய தீர்மானத்துக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் போராட்டம்!





கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் எனத் தெரிவித்து கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்தை இலங்கை ஆசிரிய சங்கத்தினர் முன்னெடுத்திருந்தனர்.

கல்வி அமைச்சிற்கு முன்பாக இந்த எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒன்றுபட்டு வீறு கொண்டெழுவோம்!

இலங்கை நாடு தனது சுதந்திர தினத்தை எதிர்வரும் 4ஆம் திகதி கொண்டாடுகின்றது.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கில் நிலைபெற்றிருந்த தமிழர் தேசத்தின் – இராச்சியத்தின் – இறைமையை தமது ஆயுத பலத்தினால் கைப்பற்றிய அந்நிய தேசத்தவர்கள் அந்த இறையாண்மையையும் சேர்த்து இலங்கையின் சிங்கள தேசத்திடம் ஒப்படைத்து விட்டுச் சென்ற அடையாள – குறியீட்டு – தினமே இலங்கையின் சுதந்திர தினமாகும்.

ஆகவே, இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை இது சுதந்திரதினம் அல்ல. அதற்குத் தலைகீழாக – மாறாக – சுதந்திரம் பறிபோனமைக்கான குறியீட்டுத் தினம். அடிமைப்பட்ட நாள்.

இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் 1948 முதல் இந்த பெப்ரவரி தினத்தை கறுப்பு நாளாகவே – கரி நாளாகவே – தமிழர்கள் சோகத்துடன் அனுஷ்டித்து வருகின்றனர்.

பௌத்த, சிங்களப் பேரினவாதம் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு வீறு கொண்டெழுந்து, சிறுபான்மையினரை அழித்தொழிக்கும் மூர்க்கத்தில் உச்சம் கொண்டு நிற்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த அடிமைப்படுத்தல் தினத்தில் தனது உணர்வு நிலைப்பாட்டை ஒன்றுபட்டு, முன்னெப்போதும் இல்லாதவாறு எழுச்சியுடன் வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் தமிழர் தாயகத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டி வரை வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக இலங்கை நாட்டின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முதல் நாளான 3ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை தமிழர் தேசம் எங்கும் கவனவீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்குமாறு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் ஒன்றுபட்டு அழைப்பு விடுத்துள்ளன.

இப்பத்தியில் மீண்டும், மீண்டும் நாம் சுட்டிக்காட்டி வரும் பேரினவாத ஆக்கிரமிப்பு அராஜகங்களை வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் பட்டியலிட்டிருக்கின்றன.

தமிழர் தேசத்தை மேலும் மேலும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தி கபளீகரம் செய்து வருகின்றது சிங்கள அரசு.

தமிழ் மக்களின் கலாசார, பண்பாட்டு இடங்கள், மையங்கள் அழிக்கப்படுகின்றன. ஆக்கிரமிக்கப்படுகின்றன. அவை சிங்கள, பௌத்த கலாசார பண்பாட்டு இடங்களாக உருமாற்றம் செய்யப்படுகின்றன.

வடக்கு, கிழக்கின் பூர்வீகக் குடிகளான தமிழர்களை, அந்தப் பிரதேசங்களின் குடிப்பரம்பலை – இனப் பரம்பலை – குடியேற்றங்கள் மூலம் மாற்றியமைத்து, அங்கு அவர்களை சிறுபான்மையினராக்கி, அவர்களின் தாயக உரித்தையே நிர்மூலமாக்கும் பெரும் கொடூரம் அரச நாசத் திட்டமாக முழு மூச்சுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இப்போது வீறுகொண்டெழுந்து, எமது எதிர்ப்பைக் காட்டி, எமது தாயகத்தைக் காப்பாற்றித் தக்க வைக்க நாம் ஆவன செய்யாவிட்டால், அது எமது எதிர்கால சந்ததி அந்நிய மண்ணில் வசிப்பதான நிலைமையை ஏற்படும்.

அதனால்தான் விரைந்தும், ஒன்றுபட்டும், எழுச்சியுடனும், தீரத்துடனும் எமது எதிர்ப்பைக் காட்ட முன்வரவேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றன வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள்.

இதுவரை காலமும், தனது திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகள் மூலமும் முப்படைகள் மற்றும் பொலிஸாரின் ஆக்கிரமிப்புகள் மூலமும் தமிழர், தாயகத்தைச் சூறையாடி, சிங்கள மயப்படுத்தி வந்த இலங்கை அரசுகள், போரினால் நலிவுற்று, பல லட்சம் தமிழர்கள் உயிரிழந்தோ, நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்தோ போயுள்ள நெருக்கடியான – வெற்றிடமான – சூழலைப் பயன்படுத்தித் தனது சிங்கள மயப்படுத்தும் வேட்கையை தீவிரப்படுத்தியிருக்கின்றன.

இதுவரை காலமும் சிங்கள மயப்படுத்தலை ஆயுத வழியில் முறியடித்து அடக்கி வந்த தமிழ்ப் பேராளிகள் களத்தில் இல்லாத இன்றைய நிலைமையை சிங்கள அரசு இன்னும் சாதகமாகப் பயன்படுத்துகின்றது. இதனையே வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் கூட அண்மையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதுவரை படைத்துறை மூலம் ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பை முன்னெடுத்த சிங்கள் அரசு இப்போது சட்டங்களைத் தனக்கேற்றவாறு யாத்துக் கொண்டு தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை போன்றவை மூலமும் தனது பௌத்த, சிங்கள மயப்படுத்தும் கைவரிசையை விஸ்தரித்து நிற்கின்றது.

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள் சுட்டிக்காட்டி கோருவது போல எமது தாயகத்தைக் காப்பதற்கான நம் அவலக்குரல் சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை அஹிம்சை வீறோடு முன்னெடுப்பது இன்றைய வரலாற்றுக் கட்டாயமாகும்.

சரித்திரம் நமது தலை மீது சுமத்தியிருக்கும் அந்தக் கடப்பாட்டை பொறுப்புணர்வோடு உணர்ந்து, ஒன்றுபட்டு வீறுகொண்டெழுந்து, எமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதில் ஐக்கியப்படுவோம்.

## குருந்தூர் மலைக்குச் சென்ற கூட்டமைப்பு எம்.பிக்களை தடுத்து நிறுத்திய இராணுவம்!



முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வு பணிகள் இடம்பெறும் இடத்துக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரே இந்த விஜயத்தை மேற்கொண்டனர்.

குறித்த பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரை அங்கு காவலில் நின்ற இராணுவத்தினர் உள்ளே செல்லவிடாது தடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமது மேலதிகாரியின் உத்தரவுப்படி யாரும் உள்ளே செல்ல அனுமதிக்க முடியாது என இராணுவ முகாமின் இராணுவ அதிகாரி பணித்துள்ளார் எனத் தெரிவித்து இவ்வாறு தடை விதித்தனர்.

இதனையடுத்து அந்த இடத்திலிருந்து தொலைபேசி வாயிலாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவை அழைத்த நாடாளுமன்ற உறுப்பினர், விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகமும் தொலைபேசியூடாக சார்ள்ஸ் நிர்மலநாதனுடன் கலந்துரையாடியதன் பின்னர் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் பங்குபற்றலுடன் அவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ரவிகரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்களும் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1,500 இற்கு மேற்பட்டோர் ஒரே நாளில் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து 1,520 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவே நாளொன்றுக்கு பதிவாகிய குணமடைந்தோரின் அதிகபட்ச எண்ணிக்கை என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 52 ஆயிரத்து 566 ஆக அதிகரித்துள்ளது.


நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 7 ஆயிரத்து 68 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை, 863 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 290 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீமெந்து ஏற்றிச் சென்ற கனரக வாகனத்தில் மோதி இருவர் பலி!





புத்தளம் பாலாவி சீமெந்து தொழிற்சாலையிலிருந்து சீமெந்து ஏற்றிச்சென்ற கனரக வாகனத்துடன் பாலாவி பகுதியிலிருந்து கல்லடி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளொன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து கடந்த புதன்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது, ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளமையுடன் மற்றுமொருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவேளை உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவர்கள் மானவெரி சிறாமபையடி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரும், அட்டவில்லு பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவருமே என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.தே.கவின் மூத்த துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார் அர்ஜுன!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் பதவியை ஏற்க மறுத்துள்ளார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான முன்மொழிவை உருவாக்கக் கட்சி தவறிவிட்டது எனக் குறிப்பிட்டு அர்ஜுன ரணதுங்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அத்தோடு ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த துணைத் தலைவராக தான் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் கிடைத்ததாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், இந்தப் பதவியை ஏற்க வேண்டாம் என தான் முடிவு செய்துள்ளார் என அர்ஜுன ரணதுங்க, ரணில் விக்கிரமசிங்கவிற்கு தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்கள் படுகொலையுண்டமைக்கு டக்ளஸ் பதவியைக் கடாசி வீச வேண்டும்!

## யாழ். இந்துசமயப் பேரவை வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன்.29

அண்மையில் இந்திய மீனவர்கள் படுகொலைக்கு இலக்காகி மரணமான செய்தி எமக்குப் பெருங் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று இந்த விடயத்தோடு சம்பந்தப்பட்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது பதவியை உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண் டும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்துசமயப் பேர வையின் யாழ். தலைவர் ஈசான சிவ.சக்திகிரீவன்.

இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டமை தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்திய மீனவர்கள் சட்டவிரோதமாக நடந்தால் கூட அவர்களைப் படுகொலை செய்வதற்கு இலங்கை அரசமைப்பில் எங்காவது ஏற்பாடு உண்டென்பதைப் பகிரங்கப்படுத்த முடியுமா?

இந்திய மீனவர்கள் தவறிழைத்திருப்பார்களானால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றின் முன் நிறுத்தி யிருக்க வேண்டும். அதைவிடுத்து 'நடக்க கூடாதது நடந்து விட்டது' என்று அமைச்சர் கூறுகின்றமை தர் மத்தை நம்புகின்ற எவரும் ஏற்றுக் கொள்ளப்போவ தில்லை.

மனுநீதிகண்ட சோழன் ஆட்சியில் மகனால் கொலையுண்ட ஆண் கன்றுக்கு எத்தகைய நீதி வழங் கப்பட்டதோ அதையே நாம் நீதி என்று ஏற்போம். அது தவிர்ந்த வார்த்தையாலங்கள் நீதிக்குட்படாதென் பதைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.

கடற்படைக்காக வக்காளத்து வாங்குவது எந்த நீதிக்குள்ளும் அடங்காது என்பதைத் தெளிவுபடுத்து கின்றேன்.

இலங்கைத்தமிழ் மக்களை இந்தியாவுடன் முரண் பட வைப்பதற்காகவே தமிழரான டக்ளஸ் தேவானந்தா விற்கு கடற்றொழில் அமைச்சுப் பதவியை வழங்கிக் கபட நாடகமாடுகிறது அரசு. இந்தச் சதிவலையில் அமைச்சர் தேவானந்தா அகப்படக்கூடாதென்பதே எமது பெருவிருப்பம். இந்த அமைச்சர் பதவியை உட னடியாகத் தூக்கி வீசி விட்டு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும். இதுவே இன்றைய காலத் தின் கட்டளை. பெரியபுராணத்தில் கூறியமை போல் சழக்கென்றிசைந்து தர்மம் சலித்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் அமைச்சர் டக்ள ஸுக்கு ஏன் கடற்றொழில் அமைச்சை வழங்கியது என்பது எம்போன்றவர்கள் அல்லாது வேறு யார்க்குத் தான் புரியும். இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொண்டால் போதுமானது. – என்றுள்ளது.

# கொழும்பில் போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளது!

## சாரதிகளுக்கான அறிவிப்பு

கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் 3 ஆம் திகதிவரை 5 நாள்களுக்கு போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற வுள்ள சுதந்திரதின பேரணிக்கான ஒத்திகை காரண மாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஒத்திகை நாள்களில் காலை 6 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும் சுதந்திர தினத்தன்று அதிகாலை 4 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையும் இவ்வாறு போக்குவரத்து தடைசெய்யப்படும்.

இதேவேளை, இந்த நாள்களில் தாமரைத் தடாகத் துக்கு அருகே வீதியின் ஒரு பகுதியும் போக்குவரத்துக் காக மூடப்படவுள்ளது.

இதன் காரணமாக சாரதிகள் இந்தக் காலகட்டத்தில் மாற்று வீதிகளை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

# 12 இடங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேல் மாகாணத்தில் விசேட செயற்பாடு!

தனிமைப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் நேற்று (வியாழக்கிழமை) விசேட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் மேல் மாகாணத்தைவிட்டு வெளியேறும் நபர்களுக்கு துரித அன்டிஜன் பரிசோ தனை மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் 12 இடங்களில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேல் மாகாணத்தில் இனங்காணப்பட்ட பொது இடங்கள், பொதுச் சந்தைகள், மீன் விற்பனை நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள் மற் றும் ஏனைய பொருளாதார மத்திய நிலையங்களிலும் துரித அன்டிஜன் பரிசோதனை மற்றும் பி.சி.ஆர். பரி சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனாவைத் திறம்படக் கையாளுகின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை 10 ஆவது!

கொழும்பு, ஜன்.29

கொரோனா வைரஸ் தொற்றை மிகவும் திறம்பட கையாள்வது தொடர்பாக ஆஸ்திரேலிய சிந்தனைக் குழுவான லோவி இன்ஸ்டியூட்டின் புதிய பகுப் பாய் வில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியலில் நியூஸிலாந்து முதல் இடத்தை பிடித்துள்ளமையுடன், வியட்நாம், தாய்வான் மற்றும் தாய்லாந்து ஆகியவை முறையே இரண்டாவது, மூன் றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பிடித் துள்ளன. மேலும் ஆஸ்திரேலியா எட்டாம் இடத்திலும் உள்ளது.

லோவி இன்ஸ்டியூட் கிட்டத்தட்ட 100 நாடுகளின் கொரோனா வைரஸ் நிலைமைகளைக் கருத்திற் கொண்டே இந்தத் தரவை வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் கொரோனா நோயாளர் களது எண்களையும் உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள் மற்றும் சோதனை விகிதங்களையும் ஆராய்ச்சியா ளர்கள் கண்காணித்தனர்.

கொரொனாத் தொற்றால் கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ள அமெரிக்கா 94 ஆவது இடத்திலும் இந்தோனேஷியாவும் இந்தியாவும் முறையே 85 மற்றும் 86 ஆவது இடங்களையும் பிடித்துள்ளன.

# நீர் நிலையிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்பு!

## மகிழூர் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மகிழூர் பகுதியில் அமைந்துள்ள நீர் நிலை ஒன்றிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது–

நீர் நிலையில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதாகப் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய அங்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

கடந்த 23.01.2021 அன்று, சனசமூக வீதி மகிழூரைச் சேர்ந்த பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனக் குறித்த பெண்ணின் உறவினர்கள் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்நிலையில் பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய காணாமல்போன பெண் நீர் நிலையில் உயிரிழந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், ஒரு பிள்ளையின் தாயான 40 வயதுடைய யோகராசா புஸ்பலதா என அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# இலங்கையிலும் கொரோனாத் தடுப்பூசிகள் முதற்கட்டமாக 6 வைத்தியசாலைகளுக்கு!



இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் – அஸ்ட்ராஜெனெகா கொவிட் – 19 தடுப்பூசிகள் நேற்று (வியாழக்கிழமை) நாட்டுக்கு கொண்டுவரப் பட்டுள்ளன.

நேற்று முற்பகல் 11 மணியளவில், அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசிகளை கொண்டுவந்த விமானம் நாட்டை வந்தடைந்தது என்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகளின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பொருட்டு இந் திய அரசு, அஸ்ட்ராஜெனெகா கொவிட் – 19 தடுப் பூசிகளை நன்கொடையாக இலங்கைக்கு வழங் கியுள்ளது.

இவ்வாறு நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட தடுப் பூசிகளை விமான நிலைய குளிர்சேமிப்பகத்தில் களஞ்சியப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த தடுப்பூசிகளை கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள 6 வைத்தியசாலை களுக்கு முதற்கட்டமாக வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய குறித்த வைத்தியசாலைகளி லுள்ள பணியாளர்கள் மீது இந்த தடுப்பூசிகளை செலுத்தவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதாவது கொழும்பு தேசிய வைத்தியசாலை, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, ஹோமாகமா பிரதான வைத்தியசாலை, கொழும்பு கிழக்கு பிரதான வைத்தியசாலை மற்றும் அங் கொடயிலுள்ள தொற்று நோய் வைத்தியசாலை ஆகியவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களுக்கே இந்த தடுப்பூசிகளைச் செலுத்தவுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

குறித்த வைத்தியசாலைகளில் முதற்கட்டமாக சுமார் 25 சதவீத ஊழியர்களுக்கு ஆரம்பத்தில் தடுப்பூசி செலுத்தப்படும். ஏனைய ஊழியர்களுக்கு அடுத்த சில நாள்களில் தடுப்பூசி செலுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, பிரதான வைத்தியசாலைகளில் தடுப்பூசி செலுத்தும் பணிகளுக்கு இணையாக, மத்திய ஔடத களஞ்சியத்தின், நாடு முழுவதும் உள்ள 26 பிரதேச களஞ்சியங்களுக்கும் தடுப் பூசிகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படும் எனவும் வைத்தியர் ஹேமந்த ஹேரத் குறிப்பிட்டார்.

தடுப்பூசிகள் பகிர்ந்தளிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, உடனடியாக அடுத்த வாரம் முதல், ஏனைய வைத்தியசாலைகளில் உள்ள பணிக்குழா மினருக்குத் தடுப்பூசி செலுத்தும் பணிகள் ஆரம் பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, இலங்கைக்கு சீன அரசாங்கம் மூன்று லட்சம் கொரோனாத் தடுப்பூசியை வழங்க வுள்ளதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் அறி வித்துள்ளது.

குறித்த தடுப்பூசிகளும் எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படும் எனவும் சீனத் தூதரகம் கூறியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஔவையார் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு!





வவுனியா சின்னப் புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையார் நினைவுத் தூபியில் அவரது நினைவுதினம் நேற்று (வியாழக்கிழமை) காலை அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் நகர சபை உபதலைவர் சு.குமாரசாமி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் ஔவையாரின் திருவுருவ சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது நினைவுப் பேருரையை ஆசிரியர் உதயகுமார் நிகழ்த்தியிருந்தார்.

இந்த நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான சந்திரகுலசிங்கம் மோகன், கே.ராஜலிங்கம், சு.காண்டீபன், நா.சேனாதிராயா,சமூக ஆர்வலர்களான சந்திரகுமார் கண்ணன், மாதவன், விக்னா மற்றும் நகரசபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஜெனிவாவில் அரசுக்கு எதிராக கடுமையான தீர்மானங்கள் வரும்!

## இரா.சாணக்கியன் நம்பிக்கை



ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு எதிராகக் கடுமையான தீர்மானங்கள் வரும். ஆகவே அதிலிருந்து தப்ப வேண்டும் என்பதற்காகவே விசாரணை ஆணைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் இரா.சாணக்கியன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்துள்ள நிலையில் புதிய ஆணைக்குழுவை நியமித்து எதனையும் கண்டுபிடிக்கமுடியாது.

இந்த நாட்டில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலை மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகள் நடந்துள்ளன. இவையெல்லாம் உலகெங்கும் அறிந்த உண்மை. இது தொடர்பில் ஒரு குழுவை நியமித்து ஆராயவேண்டிய அவசியம் இல்லை.

இந்த நாட்டில் ஜனாதிபதி குழுக்களை அமைப்பது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கிழக்கில் தொல்பொருள் செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது அதில் தமிழர்கள் எவரும் இல்லை.

புதிய அரசமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கான குழுவில் பெயரளவில் ஒரு தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். பொதுவாக ஜனாதிபதி நியமிக்கும் ஆணைக்குழுக்களை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையே உள்ளது.

இம்முறை ஜெனிவாவில் அரசாங்கத்துக்கு எதிரான கடுமையான தீர்மானங்கள் வரும், அதிலிருந்து தப்ப வேண்டும் என்பதற்காக இவ்வாறான ஆணைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

அத்துடன் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தொடர்பாக சிறுபிள்ளைத்தனமான கருத்துக்களை வெளியிடுவதை விடுத்து, இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அங்கு நீங்கள் செய்யவேண்டிய உண்மையான செயற்பாடுகளை செய்யவேண்டும். எவ்வளவு காலத்துக்கு தப்பினாலும் என்றாவது ஒரு நாள் பொறியில் சிக்கியேயாகவேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்கள் இணைப்பு!

பல்கலைக்கழகங்களில் மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்களை இந்த ஆண்டில் இணைத்துக் கொள்ளவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவிப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல்கலைக்கழகங்களில் மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை தொடர்பான திட்டம் மீளாய்வு செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாணவர்களை உள்வாங்கும் புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# கொலையில் முடிந்தது குடும்பப் பிரச்சினை: மாமனார் தாக்கி மருமகனின் சகோதரர் பலி!

குடும்பப் பிரச்சினையின் காரணமாக மாமனார் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் மருமகனின் சகோதரர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போபே பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை 6.50 மணியளவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹன்வெல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

உயிரிழந்த நபர், சந்தேக நபரின் மருமகனின் சகோதரர் என்பதுடன், குடும்பப் பிரச்சினையொன்றின் காரணமாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.சம்பவம் தொடர்பில் 69 வயதுடைய சந்தேக நபரை கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# போரதீவுப்பற்றில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது இடங்களை தூய்மைப்படுத்தும் நடவடிக்கை!





வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பொது இடங்களைத் தூய்மைப்படுத்தும் செயற்பாடுகளை போரதீவுப்பற்று பிரதேசசபை முன்னெடுத்து வருகின்றது.

மேலும் டெங்கு நோயின் தாக்கமும் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ள நிலையில் பொது மக்களின் நன்மை கருதி இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த வதனமார் பூஜை செய்யும் ஆலயமாக கருதப்படும் கல்லடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை சிரமதான நடவடிக்கைகள் மூலம் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு ஆத்துவாளைகளும், புற்களும், முட்களும் பரந்து காணப்படுகின்ற காரணத்தால் போரதீவுப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் யோ.ரஜனியின் தலைமையில் பிரதேசசபை செயலாளர் பா. சதீஸ்கரனின் வழி நடத்தலின் கீழ் இந்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த சிரமதானத்தில் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வெல்லாவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி, கல்லடிப் பிள்ளையார் ஆலய நிர்வாக சபையினர் எனப் பலர் பங்குகொண்டிருந்தனர்.

நேற்று இந்த ஆலயத்தில், தைப்பூச தினத்தை முன்னிட்டு ஆலயத்தில் வதனமார்களால் மிகவும் சிறப்பான முறையில் பூசைவழிபாடுகள் நடைபெற்றன.

வயலில் வேளாண்மை வெட்டி முதல் புதூர் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கால்நடைகள் வளர்க்கும் பண்ணையாளர்கள் முதல் பால் கறந்து பொங்கள் வழிபாடுகள் செய்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிறுத்திய கார் மீது லொறி மோதியது!

## தாயும் பிள்ளையும் காயம்









யாழ்ப்பாணம் ஏ – 9 வீதியில் கடந்த புதன்கிழமை காரொன்றுடன் லொறி மோதி விபத்திற்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.


ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காரொன்றில் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணித்த நிலையில், உணவருந்துவதற்காக மதவாச்சிக்கு அண்மையில் ஏ – 9 வீதியில் வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

உணவருந்தியதன் பின்னர் தாயும் பிள்ளையும் காரில் ஏறி அமர்ந்திருந்துள்ளனர்.

இதன்போது பின்னாலிருந்து வந்த லொறியொன்று குறித்த காரின் மீது மோதியதுடன் காரின் முன்னாலிருந்த ஓட்டோக்கள் இரண்டின் மீதும் மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த தாயும் பிள்ளையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வே.வரதசுந்தரம்




# திருவிழாச் சிறப்பு

**நோயினால் நீங்கா வறுமையா லலைந்து**
**நொசிவுறு மடியவர் தம்மைத்**
**தாய்நிகர் கருணை ததும்பிடத் தாங்குந்**
**தன்மையால் நின்னடி புகுந்தோம்**
**வேய்நிகர் தோளிபங்கமர்ந் தருள**
**விண்முத லைந்தினும் விரவித்**
**தேய்விலா தியக்குஞ் சுந்தர முதலே**
**சுகமுறும் வாழ்வெமக் கருளே!**

ஈழத்துச் சிதம்பரம் யாத்திரைவந்த சிவனடியார்கள், சுந்தரேஸ்வரப் பெருமானை நோக்கித் தமக்கு நோயிலா, வறுமையிலா வாழ்வு தருமாறு இப்பாடல் மூலம் இறைஞ்சி வேண்டி நிற்பர். இதனைத் தொடர்ந்து, இப்பதியின் திருவிழாச் சிறப்பினை அறிந்து வியப்படைவர்.

மேலான வேள்வி என்று போற்றப்படும் திருவிழா படைத்தல் முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும். திருவிழா நடைபெறும்போது, அது முப்பொருள்களை விளக்கும் பாவனையைக் காண்கிறோம். ஆண்டுத் திருவிழாக்களை அடியார்கள் பக்தி உணர்வுடன் தரிசித்தல் சாம்பவி தீக்கை என்று சிதம்பரம் யாத்திரைவந்த சிவனடியார்கள் தெளிவு பெறுகின்றனர்.

திருக்கோயில் திருவிழாக் காலம் திருவருள் பொழியும் தீக்கைக் காலமென்பதால் அடியார்கள் சைவஆசாரத்தைப் பேணி, மனம், மொழி, வாக்கு



மூன்றினையும் இறைவன்பால் செலுத்தி, உலகத்துச் சிந்தனை தவிர்த்து, உலகத்துப் பேச்சுத் தவிர்த்து, தொழுதல் வேண்டும் என்று தெளிவு பெறுவர்.

கொடியேற்ற விழாவினை நோக்கினால், கொடிமரம் சிவனாகும், அக்கொடிமரத்தில் ஏற்றப்படும் சீலையும், அச்சீலையில் வரையப்பட்டுள்ள உருவமும் பசுவைக் குறிப்பன. அதனோடு உள்ள தருப்பைக் கயிறு பாசமாகும். கொடிச்சீலையுடன் காணப்படும் தருப்பைக் கயிறு தவிர்ந்த வெள்ளைக் கயிறு - கொடிக்கயிறு - திருவருட் சத்தியைக் குறிப்பது. உயிர் சிவஞானம் பெறல் இங்கு விளக்கப்படுகிறது.

இரண்டாம் நாள் தூல உடம்பு, சூக்கும உடம்பு ஆகிய இருவகை உடம்பிலும் பற்று நீக்குதல் வேண்டும் என்பதனை உணர்த்தும்.

மூன்றாம் நாள் மூவினை, முப்புத்தி, முப்பற்று ஆகியவற்றை நீக்குதலைக் குறிப்பது.

நாலாம் நாள்விழா மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய காரணங்கள் நான்கையும் நீத்தலைக் குறிக்கும்.

ஐந்துமலம், ஐம்பொறி, ஐம்புலன் என்பவற்றைப் போக்கி சிவனுக்கு அடிமையாதலைக் காட்டும் ஐந்தாம் திருவிழா.

உட்பகை ஆறையும் நீக்கல் ஆறாம் திருவிழா.

எழுவகைப் பிறப்பையும் நீக்கல் ஏழாந் திருவிழா எனப்படும்.

முற்றுமுணர்தல், வரம்பில் இன்பமுடைமை, இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்குதல், தன்வயத்தானாதல், பேரருளுடைமை, முடிவிலாற்றுடைமை, இயற்கை உணர்வுடைமை, தூய உடம்பினனாதல் என்ற எண் குணங்களும் உயிரியல் விளங்குவதை எட்டாம்நாள் விழாக் குறிக்கும்.

வீடுபேற்றை நாடிநிற்றல் ஒன்பதாம் திருவிழா.

இறைவன் உயிருக்குப் பேரின்பப் பெருவாழ்வு அருளுதல் பத்தாம் நாள் விழா.

இத்தகைய சிறப்புடைத் திருவிழா ஆண்டுதோறும் ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனித் திங்களில் வரும் உத்தர நட்சத்திரத்துக்கு ஒன்பதுநாள் முன்பாகக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தம் நிகழும். பதினோராம் நாள் திருக்கல்யாணம். தீர்த்தத் திருவிழாவுக்கு முதல் நாள் தேர்த்திருவிழா. தேர்த்திருவழாவன்று சுவாமிக்குக் கருஞ்சாந்து அணியும் வழக்கம் உண்டு. இது முப்புரத்தைப் பரமசிவன் எரித்து அழித்த செயலைக் குறிக்கும்.

திருமண விழாவின் போது, காலையில் சுந்தரேசுவரருக்குக் குடமுழுக்குப் பூஜை நிகழும். அதனை அடுத்து சௌந்தராம்பிகை காளிகோயில் மண்டபத்தில் இறைவனைக் கைபிடிக்க வேண்டித் தவம் இயற்றுவார். பிற்பகல் சந்திரசேகர் கருணை மிக்கூறி இடபமாம் ஊர்தியில் அம்மையாருடன் வீதிவலம் வருவார். திருக்கோயில் நுழைவார். அதனைத் தொடர்ந்து திருக்கல்யாணச் சடங்குகள், பூஜை நடைபெறும்.

**கண்ணுதலை மணமுடிப்பாள் காடுகிழாள்**
**கோட்டத்திற் கடிய நோன்பு**
**பண்ணுமுமைக் கிறையருளி அம்மையுடன்**
**அணிகொண்ட பசிய வீதி**
**நண்ணிவலம் வந்துள்ளே நயந்தவழி**
**மணச்சடங்கு நடத்தித் தீபங்**
**கண்ணிறையக் காட்டி வழிபாடுசெய்து**
**மணப்பொலிவைக் கண்ட வாறே!**

திருவிழாக் காணும் பயனைக் காஞ்சிப் புராணம் விளக்கும். திருவிழாக் காண்போர், தீர்த்தமாடி, இறைவனைத் தொழுவோர், சாம்பவி தீக்கை பெறுவோர், மலநீக்கம் பெற்று, திருவடிப் பேற்றினை அனுபவிப்பர். கணநாதர்கள் ஆவர். இதோ அப்பாடல்:-

**இத்தகு கடவுட் சாறு**
**நோக்கியங் கிறைஞ்சு வோரும்**
**அத்தகு விழிவி னீற்றிற்**
**தீர்த்த நீராடு வோரும்**
**பைத்தபாம் பல்குற் செவ்வாய்ப்**
**பணிமொழி ஒருபாண் மேய**
**வித்தகன் கயிலை நண்ணி**
**விறற்கண நாத ராவார்!...**

இதனை விட இத்தலத்தில், கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் சோமவாரத் திருவிழா நிகழும். அவ்வாறே கார்த்திகை மாதத்தில் விளக்கீட்டு விழாவும் இங்கு நடைபெறும்.

இக்கோயிலின் கிழக்கே பனை, தென்னை, கமுகு என்னும் மரங்களில் ஒன்றை விளக்குத் தண்டாக நடுவர். பனைஓலை, தென்னோலை, கமுகோலை என்பவற்றுள் ஒன்றினை விமானம் போல் கட்டி, எழுந்தருளி மூர்த்தி வந்ததும் இவ்விளக்கினை ஏற்றிச் சோதியினை உண்டாக்குவர். சொக்கப்பானை கட்டிச் சோதி உண்டாக்குவர்.

இதே போன்று நால்வர் குருபூசைவிழா, கந்தசட்டிவிழா, நவராத்திரிவிழா என்பனவும் இங்கு நடைபெறும்.

**(தொடரும்)**

மேலான வேள்வி என்று போற்றப்படும் திருவிழா படைத்தல் முதலிய ஐந்தொழில்களைக் குறிக்கும். திருவிழா நடைபெறும்போது, அது முப்பொருள்களை விளக்கும் பாவனையைக் காண்கிறோம்.



காலைக்கதிர் Kalaikkathir

# சர்வதேச அமைப்புக்களின் தேவைக்காக பிரதமர் மஹிந்த செயற்படுபவர் அல்லர்!

## மேர்வின் சில்வா புகழாரம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, ஐக்கிய நாடுகள் சபை ஆகிய சர்வதேச அமைப்புக்களின் தேவைக்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயற்படுபவர் அல்லர். தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவ்வாறே செயற்படுவார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் உள்ளக மட்டத்திலான தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டும்..

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்ய முடியும் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. அவ்வாறாயின் உடல்களை அவர்களின் நாடுகளிலே புதைத்துக் கொள்ளலாம். எமது நாட்டில் புதைக்க முடியாது. சுகாதார தரப்பினரது தீர்மானங்களுக்கு அமையவே அரசாங்கம் செயற்படுவது கட்டாயமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்க வேண்டாம் என மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடும் கருத்துக்கு மதிப்பளியுங்கள். தேசிய வளத்தை பாதுகாக்க அனைத்து இன மக்களும் ஒன்றிணைய வேண்டும். நாட்டுக்காக வீதிக்கிறங்கிப் போராடவும் தயாராக உள்ளோம்.

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தில் உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்ய வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிடுவார்களாயின் இறப்பவர்களின் உடல்களை விமானத்தின் ஊடாக கொண்டு சென்று அவர்களின் நாட்டிலே புதைத்துக் கொள்ளலாம்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் மகாநாயக்க தேரர்களின் கருத்துக்கு மதிப்பளித்து சுயாதீனமாக செயற்படும். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை, ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயற்படுபவர் அல்லர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செயற்படமாட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேசிய வளங்களை விற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றமை தவறு. தற்போதைய எதிர்க்கட்சியினர் அப்போது அதனை எதிர்க்கவில்லை. பொதுஜன பெரமுன கடந்த அரசாங்கத்தில் எதிர்க்கட்சியாக செயற்பட்ட வேளை அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பாதுகாக்க முறையாக செயற்படவில்லை.

ஐக்கிய தேசிய கட்சி பலம் பெற்ற கட்சியாக எழுச்சிப்பெறும். தற்போது கட்சியில் தவறான நோக்கங்களைக் கொண்டவர்கள் உள்ளார்கள். கட்சி தூய்மைப்படுத்தப்பட்டு மீண்டும் ஆட்சியை கைப்பற்றும். எப்போதும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாகவே செயற்படுவேன். - என்றார்.

# யாழ்.வந்து திருமலை திரும்பியவருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது!

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணம் நகரம் - வட்டுக்கோட்டைக்கு வருகை தந்து, திருகோணமலைக்கு திரும்பியவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவரிடம் எழுமாறாக பெறப்பட்ட மாதிரியின் அடிப்படையிலேயே கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதென வட. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ்வாறு தொற்றால் பாதிக்கப்பட்டவர், திருகோணமலை திரும்பியுள்ள நிலையில் அந்த மாவட்ட சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வந்து செல்வோரிடம் எழுமாறாக மாதிரிகள் பெறப்படுகின்றன. அவ்வாறு மாதிரிகள் பெறப்பட்டவர்களில் ஒருவருக்கே கடந்த புதன்கிழமை தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் கடந்த புதன்கிழமை, 340 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# கிழக்கு முனைய சர்ச்சைக்கு அடுத்த வாரம் இறுதி தீர்வு!

## காமினி லொகுகே உறுதி

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் துறைமுக தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. அனைத்து தரப்பினருடனும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிழக்கு முனைய விவகாரத்தில் அடுத்த வாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. அனைத்து செயற்பாடுகளும் ஆரம்பத்தில் இருந்து பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய வளங்களை விற்கும் கொள்கை அரசாங்கத்துக்குக் கிடையாது என ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்கள்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் முத்தரப்பு பேச்சு இடம்பெற்று வருகிறது. கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை பிற நாடுகளின் ஆதரவின்றி அபிவிருத்தி செய்ய முடியும் என யோசனை முன்வைத்துள்ளார்கள். தொழிற்சங்கத்தினரது யோசனைகள் பரிசீலனை செய்யப்படும். அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து அடுத்த வாரம் கிழக்கு முனையம் விவகாரம் நிறைவு பெறும்.

வாகன நெரிசலைக் குறைப்பதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும். பிரதான வீதிகளைப் பெருப்பிக்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொதுப்போக்குவரத்து சேவையில் நவீனமயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சாதனங்களை இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கங்களைக் கொண்டு எதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களால் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது. நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுக் கொள்கிறோம். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது. - என்றார்.

# கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவு உணர்வுபூர்வமாக நேற்று அனுஷ்டிப்பு!



மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) காலை உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

பொலிஸார் தடைகள் ஏற்படுத்த முற்பட்டபோதும், நிகழ்வு அமைதியான முறையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றிய நிலையில் மகிழடித்தீவு கொக்கட்டிச்சோலை நினைவுத் தூபியருகே நடைபெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் பட்டிருப்பு கிளையின் தலைவருமான பா.அரியநேத்திரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதி தவிசாளர் பிரசன்ன இந்திரகுமார், தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தலைவர் கி. சேயோன், வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் தி.தீபாகரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நினைவுத்தூபியில் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டதை தொடர்ந்து, உயிர் நீர்த்தவர்களின் ஆத்ம சாந்திவேண்டி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 1987 ஜனவரி 28ஆம் திகதி இடம்பெற்ற இறால் வளர்ப்பு பண்ணை படுகொலையும் 1992 ஜூன் 12ஆம் திகதி இடம்பெற்ற மகிழடித்தீவு படுகொலையும் சேர்த்து ஏறக்குறைய 239 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

தமிழர்களையும் நினைவு கூரும் வண்ணமே 'கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவுத் தூபி 2000 ஆம் ஆண்டு மகிழடித்தீவு சந்தியில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தட்டுவன்கொட்டியில் மிகவும் உயரமான சிவன் சிலை அமைக்க சிறீதரன் எம்.பியால் அடிக்கல் நாட்டப்பட்டது!

கிளிநொச்சி - ஆனையிறவு, தட்டுவன்கொட்டியில் கரைச்சி பிரதேச சபையால் அமைக்கப்படவுள்ள நடராஜர் சிலைக்கான அடிக்கல் நேற்று (வியாழக்கிழமை) நாட்டி வைக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், குறித்த சிலைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்த சிலை 27 அடி உயரத்தில் அமையவுள்ளதுடன் இலங்கையில் மிக உயரமானது எனவும் குறிப்பிடப்படுகிறது.

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், சின்மயா மிஷன் சுவாமிகள், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் முதல்வர், இந்து சமய அமைப்புகளின் பிரதிநிதிகள், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# கொவிட் தொற்றுக்குள்ளான மருத்துவர் ஆபத்தான நிலை!

கொவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்ட ஒரு மருத்துவர் தற்போது ஆபத்தான நிலையில் உள்ளார் என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மருத்துவர் தற்போது கராபிடிய போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார் என அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பதில் செயலாளர் வைத்தியர் நவின் டி சொய்சா குறிப்பிட்டுள்ளார்.

அவரது சிகிச்சையை தீவிரப்படுத்த கராபிடிய போதனா வைத்தியசாலையுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# மனித உரிமைகளை வென்றெடுப்பதே நாட்டில் மிகப்பெரிய சவாலாகியுள்ளது!

## கரு ஜெயசூரிய கிண்டல்

நாட்டில் மனித உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக மிகப்பெரிய கேள்வி எழுந்துள்ளதாகவும், ஒரு தனி நபருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை கொடுத்து இந்த நாட்டு மக்கள் அனைவரதும் உரிமையை ஒரு நபர் தீர்மானிக்கும் நிலை உருவாக்கியுள்ளதாகவும் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார். புதிய அரசமைப்பை உருவாக்கி தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும், இனவாதத்தைத் தூண்டி அரசியலை முன்னெடுக்கும் தற்போதைய அரசியல் பயணம் தொடருமாயின் எதிர்காலத்தில் மிகப்பெரிய பிரச்சினைகளை நாட்டினுள் உருவாக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமைகள், அரசியல் செயற்பாடுகள் மற்றும் புதிய அரசியல் அமைப்பின் தேவைப்பாடு தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

தற்போது நாட்டில் உருவாக்கப்பட்டு வருகின்ற இனவாத அரசியல் கலாசாரம் இலங்கையை நீண்ட காலத்துக்கு நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது. இந்த விடயத்தில் அனைவரும் குறுகிய நோக்கத்தில் பார்க்கின்றனர். ஆனால், தூரநோக்கு சிந்தனையுடன் இந்த நாட்டின் இன மத உரிமைகளைப் பலப்படுத்தும், பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இப்போது பயணிக்கும் இந்த பயணம் எதிர்காலத்தில் மிகப்பெரிய பிரச்சினைகளை நாட்டுக்குள் உருவாக்கப் போகின்றது. அவ்வாறு எதுவும் நடந்து விடக்கூடாது என நான் பிரார்த்திக்கிறேன். மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சமூகத்திலே மக்கள் வாழ வேண்டும், ஒருவரது அடிப்படை உரிமையைத் தடுக்கும் உரிமை எவருக்கும் வழங்க முடியாது. ஆனால், இன்று மக்களின் அடிப்படை உரிமைகளைத் தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தகவல் அறியும் சட்டத்தையும் மீண்டும் தடைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனத் தெரிய வருகின்றது. இதுகூட மக்களின் அடிப்படை உரிமையைப் பறிக்கும் செயற்பாடாகவே நான் கருதுகிறேன். 20 ஆம் திருத்தத்தின் பிரதிபலிப்பே இவையாகும். நாம் ஒருபோதும் 20 ஆம் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு தனி நபருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை கொடுத்து இந்த நாட்டு மக்கள் அனைவரதும் உரிமையை ஒரு நபர் தீர்மானிக்கும் செயற்பாடே இடம்பெற்றுள்ளது. இவ்வாறு அதிகாரம் பொருந்திய ஜனாதிபதி ஒருவர் உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை என்றே நினைக்கிறேன்.

எனவே, புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், இந்த அரசமைப்பில் ஜனநாயகம், மனித உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். 20 ஆம் திருத்தத்தைக் கொண்டுவந்து அதன் மூலம் பறிக்கப்பட்ட உரிமைகள் முழுமையாக புதிய அரசமைப்பில் பாதுகாக்கப்பட வேண்டும். இதனை வென்றெடுக்கும் பொறுப்பு சிவில் அமைப்புகளைச் சார்ந்தது. அடுத்த தேர்தலில் பின்னர் மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்றால் சுயாதீன ஆணைக்குழுக்கள் தேவைப்படும். அதனை வலியுறுத்த சிவில் சமூகங்களின் முழுமையான ஆதரவு தேவைப்படும். இப்போது நான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன், எனவே, புதிய அரசாங்கத்தை உருவாக்கவோ, ஆட்சியை கவிழ்க்கவோ முயற்சிக்கவில்லை. மாறாக, மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகின்றேன். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதில் தமிழர், முஸ்லிம்களின் உரிமைகளை உறுதிப்படுத்தி தூய்மையான நாட்டை உருவாக்க வேண்டும். அதில் சிங்கள மக்களுடன் இணைந்து வாழும் சூழல் உருவாகும்.

இந்த நாட்டின் ஊடக சுதந்திரத்துக்கான நீண்டகால போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியிருந்தது, 2014 ஆம் ஆண்டு காலங்களில் எமது ஊடகவியலாளர்கள் பட்ட துன்பங்கள், அதுவரை காலமாக ஊடகவியலாளர்கள் பட்ட துன்பங்கள் நினைவில் உள்ளது. அவர்களுக்காக நாம் துணைநின்று அவர்களுக்காகப் போராடினோம். இன்று மீண்டும் அதே கலாசாரம் உருவாகிக்கொண்டுள்ளது. அதேபோல் ஊடகங்களும் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கிக்கொண்டு மிக மோசமான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. கள்ளர்களை புனிதர்கள் போன்று போற்றும் நிலைமையும் உருவாகியுள்ளது. இவற்றையும் நிராகரிக்க போராடவேண்டியுள்ளது. -என்று தெரிவித்தார்.

## போலி செய்தி வெளியிட்ட நபருக்கு விளக்கமறியல்!

இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் போலி செய்தியை வெளியிட்ட சந்தேகநபரொருவர் பெப்ரவரி இரண்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என ஊடகப்பேச்சாளர் பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் வகையில் போலி செய்தியொன்று இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்தது.

வானொலி அலைவரிசை ஒன்றின் உத்தியோகபூர்வ இலட்சினையை பயன்படுத்தி அந்த செய்தி பதிவேற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பிளியந்தல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் காப்புறுதி நிறுவனமொன்றின் இணைய பிரிவில் பணிபுரிந்து வருபவர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குற்றப்புலனாய்வு பிரிவினர் சந்தேக நபரை நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) புதுக்கடை நீதிவான் நீதி மன்றத்தில் முன்னி லைப்படுத்தியமையுடன் அவருக்கு எதிராகத் தண்டனை சட்டக் கோவையின் 120ஆவது சரத்துக்கமையவும், கனிணி குற்றப்பிரிவு சட்டவிதிகளுக்கு கீழும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்த நீதிவான் அவரை பெப்ரவரி 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பில் தொடர்ந்தும் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். - என்றார்.

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா!



கிளிநொச்சி - புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூதன சம்ததள பஞ்சதள அதிசுந்தர இராஜகோபுர கும்பாபிஷேக பெருவிழா நேற்று(வியாழக்கிழமை) காலை நடைபெற்றது.

ஸ்ரீநாகேஸ்வரி சமேத நாகலிங்க பெருமான் ஆலய நுழைவாயிலில் அமைக்கப்பட்ட சப்த தள இராஜகோபுர கும்பாபிஷேகமும் நாகதம்பிரான் ஆலய நுழைவாயிலில் அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர விசேட பூசைகளும் நடைபெற்றன.

## ஹற்றன் பொஸ்கோ கல்லூரி கொரோனா அச்சத்தால் பூட்டு!



ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி மாணவர்கள் 7 பேருக்கும் ஆசிரியர்கள் இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானமையையடுத்து, மேற்படி கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

முன்னதாக தரம் 9 இல் கல்வி பயின்று வந்த மாணவர் ஒருவருக்கு, கடந்த வாரம் தொற்று உறுதியானமையையடுத்து அவரது வகுப்பு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்களில் முதற்கட்டமாக 7 மாணவர்களுக்கும் 2 ஆசிரியர்களுக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் அறிக்கைகளின் பிரகாரம் அவர்கள் அனைவருக்கும் தொற்று இருக்கின்றமை உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏனைய மாணவர்களுக்கான அறிக்கைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை, தொற்று உறுதியான இரண்டு மாணவர்களின் சகோதரர்கள் இருவருக்கும், தொற்று பரவல் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் இதேபிரதேசத்தின் மற்றுமொரு பாடசாலையில் கல்வி கற்று வருபவர்களாவர். அதன்படி மொத்தமாக 11 மாணவர்களுக்கும் இரண்டு ஆசிரியர்களுக்கும் கடந்த புதன்கிழமை வெளிவந்த பி.சி.ஆர். அறிக்கைகளின் படி தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



**Hi Clean** உள்ளூர் உற்பத்தி செய்யும் நிறுவனமான **Nflash super Detergent** இன் முகவர் நிறுவனமான **OCC Multi Centre** இன் திறப்பு விழா, யாழ் மாநகர முதல்வர் திரு.மணிவண்ணன் **Nflash super Detergent** நிறுவன உரிமையாளர் திரு.எஸ்.நவநீதன் மற்றும் வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர் தனகோபி ஆகியோரால் இணுவில் மருதனார்மடத்தில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

**மானாவாரி பகுதிகளில் நிலத்தடி நீர் அதிகரித்திடவும், கிணற்றிலும், ஆழ்குழாய் கிணறுகளில் நீர் மேலே வர உதவுவது கண் கூடு. ஐந்து ஏக்கருக்கு குறைந்தது அரை ஏக்கரிலாவது தன் தோட்டத்தின் பள்ளமான பகுதிகளில் இடம் தேர்வு செய்யலாம். செம்மண் இருப்பின் நீர் சேமிப்பு காலம் குறைய வாய்ப்புள்ளதால் 'சில்பாலின்' நிலப் போர்வையாக, அதாவது நீரை உட்புகாது தடுக்கும் தன்மை கொண்ட "POND LINERS" போன்ற ஷீட்கள் பயன்படுத்தலாம்.**

**இதற்கு மேலும் ஓர் இணை தொழிலாக மீன் வளர்க்கலாம். எட்டு மாதம் எந்த இடத்திலும் குறைந்தது எட்டடி நீர் சேமித்தால் மீன் வளர்ப்பது எளிது. ஆனால் நவீன ஆராய்ச்சியின் பலனாக மீன் வளத்துறை மூலம் இன்னும் குறுகிய காலம் நீர் இருந்தாலும் அதில் வளர்த்திட வழிவகை உள்ளது.**

**ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி**

காலைக்கதிர் Kalaikkathir

# ‘மொட்டு’ கட்சி மீது மைத்திரி கடும் அதிருப்தி!



ஆளுங்கூட்டணியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உரிய கவனிப்பு இல்லை. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி செயற்படவில்லை.

-இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால், தமது கட்சிக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகரவால் முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆம். அப்படியான பிரச்சினை இருக்கின்றது. அவர் கூறிய கருத்தில் பிழை இல்லை. எமக்கான கவனிப்பில் குறை உள்ளது. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் எதுவும் நடைபெறுவதில்லை. உரிய வகையில் செயற்பட்டிருந்தால் இப்படியான குற்றச்சாட்டுகளை முன்வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

எது எப்படி இருந்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது பற்றியே அதிகம் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தரப்புகளில் இருந்து எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. மற்றுமொரு தரப்பாலேயே பிரச்சினைகள் எழுந்துள்ளன. - என்றார்.

# 2 கிலோ கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாரின் விசேட சுற்றி வளைப்பின் போது 2 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஓர் ஓட்டோவும் மீட்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மற்றும் திவிலுப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே கைதாகியுள்ளனர்.

மிகவும் சூட்சுமமான முறையில் கஞ்சா வியாபாரத்தை மேற்கொண்டு வந்த நபர்கள் தொடர்பில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து செம்மணிப் பகுதியில் சுற்றிவளைக்கப்பட்டு மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தீவிர விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கொரோனாவுக்கு முடிவுகட்ட வந்தன 5 லட்சம் தடுப்பூசிகள்

## கட்டுநாயக்கவில் வைத்து பொறுப்பேற்றார் கோட்டா






கொழும்பு, ஜன. 28

இந்திய மத்திய அரசின் அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துப் பொறுப்பேற்றார்.

இந்தியாவின் வெக்சின் மைத்ரி திட்டத்தின் கீழ் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒக்ஸ் போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் இன்று முற்பகல் 11.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தன.

தடுப்பூசிகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

முதல் கட்டமாக இலங்கைக்கு 5 லட்சம் தடுப்பூசிகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்திய விமான சேவைக்குச் சொந்தமான எயார் பஸ் 321 விமானம் மும்பாய் விமான நிலையத்தில் இருந்து 42 பெட்டிகளில் அடைக்கப்பட்ட நிலையில், குறித்த தடுப்பூசிகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

# தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் வெள்ளி முதல்; விருப்பமில்லாதவர்கள் தவிர்ந்திருக்க முடியும்

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 28

இந்திய மத்திய அரசு அன்பளிப்பாக வழங்கிய கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை மேல் மாகாணத்தின் 6 முக்கிய வைத்தியசாலைகளில் நாளை முதல் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

5 லட்சம் தடுப்பூசிகள் இந்திய விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் இன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

விமானத்தின் விசேட குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டு கொண்டுவரப்பட்ட தடுப்பூசிகளின் எடை 1,323 கிலோ கிராமாகும். இந்தத் தடுப்பூசிகள் விமான நிலைய வளாகத்தில் உள்ள குளிரூட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டு குளிரூட்டப்பட்ட வாகனங்களின் மூலம் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த தடுப்பூசிகள் 2 - 8 இடைப்பட்ட டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி ஏற்றல் மேல் மாகாணத்தின் 6 முக்கிய வைத்தியசாலைகளில் நாளை (29) ஆரம்பிக்கப்படும்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கையில் முன்னின்று செயற்படும் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சுகாதாரப் பணியாளர்கள், ஒரு லட்சத்து 20 ஆயிரம் முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத்துறையில் உள்ளவர்களுக்கு முதலில் தடுப்பூசி ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் விதமாக சீன அரசும் 3 லட்சம் தடுப்பூசிகளை வழங்கவுள்ளது என கொரோனாத் தடுப்பூசி கொள்முதல் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் பிரதம ஆலோசகருமான லலித் வீரதுங்க தெரிவித்தார். தடுப்பூசி ஏற்றிக்கொள்வது தனிநபர்களின் சுயாதீனமான முடிவாகும். அதை விரும்பாதவர்கள் ஏற்றிக்கொள்ளாதிருக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார் - என்றுள்ளது.

# விகாரையில் கொள்ளை முயற்சி: 5 பிக்குகள் உட்பட எழுவர் கைது!

கதிர்காமம், ஜன. 28

கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்குவைக் கொலை செய்து அவரின் உடைமைகளைக் கொள்ளையிட முயற்சித்த 5 இளம் பிக்குகள் உள்ளிட்ட 7 பேரை கதிர்காமம் பொலிஸார் இன்று கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பிக்குகள் 5 பேரும் அநுராதபுரத்தின் விகாரையொன்றைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்கு ஹல்லே ஞானத்திர தேரரிடம் பொலிஸார் வினவியபோது, என்னைக் கொலை செய்து எனது உடைமைகளைக் கொள்ளையிடவே முயற்சி மேற்கொள்ளப்பட்டது என அறிகின்றேன் என்று மாத்திரம் கூறினார்.

கதிர்காமம் மலைப்பகுதி ரஜமகா விகாரை தலைமைப் பிக்குவின் அறையை உடைத்து உட்புக முயற்சித்தபோதே பாதுகாப்புக் கடமைகளில் இருந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்படி 5 இளம் பிக்குகள் உள்ளிட்ட 7 பேரையும் கைதுசெய்தனர்.

அத்துடன் அவர்களிடமிருந்த ஆயுதங்களையும் பொலிஸார் மீட்டனர். இது தொடர்பாக கதிர்காமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உபுல் லியனகே தலைமையிலான குழுவினர் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பூசகருக்குக் கொரோனாத் தொற்று; கதிர்காமம் வள்ளியம்மனுக்குப் பூட்டு

கதிர்காமம், ஜன. 28


கதிர்காமம் ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயப் பிரதம பூசகருக்கும், அவரது மனைவிக்கும் கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது பி.சி.ஆர். பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கதிர்காமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சமன் திஸாநாயக்க தெரிவித்தார்.

இதையடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் உடனடி உத்தரவின் பேரில் ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயம் இன்று முதல் மீள் அறிவித்தல் வரும் வரையில் மூடப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 15 நாள்களில் இந்த ஆலயத்துக்கு வந்து வழிபாடு நிகழ்வுகளில் கலந்து கொண்டு தத்தம் ஊர்களுக்குச் சென்றவர்கள் மற்றும் கதிர்காமத்திலிருந்து இந்த ஆலயத்துக்கு வந்து சென்றவர்கள் அவ்வப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதர்களிடம் உடன் அறிவிக்கும்படி கதிர்காமம் பொதுச் சுகாதாரப் பிரிவினரால் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆலயப் பூசகரின் உறவினர் ஒருவரது மரணச்சடங்குகளில் கலந்து கொண்டிருந்தவர்களில் எவருக்கேனும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்கலாம். அவர்களிடமிருந்து ஆலயப் பூசகருக்கும் அவரது மனைவிக்கும் கொரோனாத் தொற்று பரவியிருக்கலாம் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது எனச் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலும் கூறியுள்ளனர்.

# 180 அடி பள்ளத்தில் வீழ்ந்தது ஓட்டோ; மீன் வியாபாரி ஒருவர் பரிதாபப் பலி



பதுளை மாவட்டம், அப்புத்தளைப் பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பெரகல கீழ் பிளக்வூட் பகுதியில் ஓட்டோ ஒன்று 180 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 28 வயது இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். இவர் பெரகல பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

பெரகல நகரத்தில் மீன் வியாபாரியான இவர் பெரகலயிலிருந்து வீடு செல்லும் போது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவருடன் ஓட்டோவில் பயணித்த மற்றொரு நபரும் படுகாயங்களுடன் தியத்தலாவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான விசாரணைகளை அப்புத்தளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிரிக்கெட் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கக் கோரிக்கை!

## அர்ஜுனவிடம் நாமல் விடுத்தார்

இலங்கையில்கிரிக்கெட் துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குமாறு இலங்கைஅணியின்முன் னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவிடம் விளை யாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கோரிக் கை விடுத்துள்ளார்.

மாத்தறையில் நேற்று (வியாழக்கிழமை)இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர் -

உள்ளூரில் கிரிக்கெட் டுக்கு குழுக்களை நியமிப் பதுநடைமுறையில்உள்ள பிரச்சினைகளுக்கு ஒரு பதிலாக அமையாது என் றும் குறிப்பிட்டார்.

எனவே நாட்டில் எந்த வொரு விளையாட்டும் அரசியல் மயமாக்கலில் லாமல் இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டுள் ளார்.

அர்ஜுனரணதுங்கவை ஒருதிறமையானகிரிக்கெட் வீரர்என்பதுடன்ஒருநல்ல தலைவர்என்றும்பாராட்டிய நாமல் ராஜபக்ஷ, லங்கா பிரீமியர் லீக்கின் போது அவர் ஆலோசனை வழங் கினார் எனவும், ரணதுங்க



வின் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன எனவும் கூறினார்.

2015 இற்கு முன்னர் உலகெங்கிலும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் கொண்டாடப்பட்டனர். ஆனால் அதற்கு பின்னர் அரசியல் மயமாக்கல் காரண மாக கிரிக்கெட் மோசமடைந்துள்ளது என்றும் அமைச் சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# இந்தியாவிடமிருந்து மேலும் 30 லட்சம் தடுப்பூசிகளை வாங்குவதற்குத் திட்டம்!

இந்தியாவிடமிருந்து மேலும் 30 லட்சம் தடுப்பூசி மருந்தை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணைய தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவால் நன்கொடையாக வழங்கப்பட்ட 5 லட்சம் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகள் நேற்று (வியாழக்கிழமை) காலை நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

சீரம் இன்ஸ்டியூட் ஒப் இந்தியாவால் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனெகாவின் கொவிட் தடுப் பூசி அவசரகால பயன்பாட்டுக்காக இலங்கை அரசாங்கத் தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் தடுப்பூசி திட்டம் இன்று முதல் கொழும்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள ஆறு வைத்தியசாலையில் தொடங்கும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் இந்த வைத்தியசாலைகளில் சுமார் 25 சதவீத ஊழியர்களுக்கு திட்டத்தின் தொடக்கத்தில் தடுப்பூசி போடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## விஸ்வரூபம் எடுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்புக்கள் நேற்று விடுத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- வடக்கு, கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டத்தை முன்னெ டுப்பதற்குத் தமிழ் பேசும் மக்கள் அனை வரையும் ஒன்றுதிரளுமாறு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

வடக்கு, கிழக்கு பூர்வீக குடிகளான நாம் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக எங்களது சுயநிர்ணய உரிமை களுக்காகப் போராடி வருகின்றோம். ஆனால், தமிழர்களின்போராட்டங்களுக்கு செவிசாய்க்காத இலங்கை அரசு தொடர்ந் தும் தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப் பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதை யாவரும் அறிவோம்.

போர் நிறைவடைந்து கடந்த பத்து ஆண்டுகளில் வடக்கு, கிழக்கை இராணுவ மையமாக்கி வரும் இலங்கை அரசு தமிழ் மக்களின் கலாசாரப் பண்பாட்டு அடையா ளங்களை அழிப்பதுடன் வடக்கு, கிழக்கு பூர்வீகக் குடிகளான தமிழர்களின் இனப் பரம்பலில் மாற்றத்தை உருவாக்கி அவர் களது இருப்பை இல்லாமல் செய்வதற் காகப் பல வகையிலும் கட்டமைக்கப் பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக் களம், வனவளப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்த மயமாக்கல் திட்டங் களை இலங்கை அரசானது முனைப்போடு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வடக்கு, கிழக்கில் குருந்தூர்மலை ஐயனார் கோயில், வெடுக்குநாறி மலை சிவன் கோயில், நிலாவரை ஆகியவற்று டன் கிழக்கில் கன்னியா பிள்ளையார் கோயில், முருகன் ஆலயம், வேற்றுச் சேனை சித்திவிநாயகர் ஆலயம் உட்பட்ட பல ஆலயங்களில் தமது பாரம்பரிய, கலா சார, சமய, வழிபாடுகளைச் செய்ய முடியா தவாறு ஆலயங்கள் ஆக்கிரமிப்பு செய் யப்படுவதோடு அங்கு பௌத்த ஆல யங் களை நிறுவுவதற்கும் முயற்சிகள் நடை பெறுகின்றன.

மேலும் வடக்கு, கிழக்கில் உள்ள சுமார் 200 இற்கும் மேற்பட்ட பாரம்பரிய இந்து ஆலயங்களைக் கையகப்படுத்துவதற் கான முயற்சிகளும் நடைபெற்று வருகின் றன.

அத்துடன் மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்க ளும், மனித உரிமை மீறல்களுக்கு எதிரா கப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்படுவதுடன் அவர்கள் தொடர்ந் தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான செயல்கள், செயற்பாட் டாளர்களின் பேச்சுரிமை, அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும்.

தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் சிங்களக் குடியேற்றங்களும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள மயிலத்தமடு, மாதவனை மேய்ச் சல் தரைக் காணிகளை அபகரித்து சிங் களக் குடியேற்றம் ஒன்றை உருவாக்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பில் உள்ள பண்ணையா ளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடன் பால் தரும் பசுக்களை திட்ட மிட்ட வகையில் படுகொலை செய்யும் நடவடிக்கைகளும்நடந்தேறிவருகின்றன. இதன் ஒரு கட்டமாக காடுகள் அழிக்கப் பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இஸ்லாமிய மக்களின் மத ரீதியான பாரம்பரிய சமய சடங்கான ஜனாஸாக்க ளைப் புதைக்கும் செயற்பாடுகளை இல் லாமல் செய்து ஜனாஸாக்கள் எரியூட்டப் பட்டு வருகின்றன. இதற்கு எதிராகப் போராடும் முஸ்லிம் சமூகத்தையும் அரச தரப்பினர் அடக்கி ஆள முனைகின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக் குதலின் பின்னர் பலதரப்பட்ட இஸ்லா மிய மக்களைப் பயங்கரவாத தடைச் சட் டத்தைப் பயன்படுத்தி தடுத்துவைத்துள் ளனர். இதே பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலரை யும் கைதுசெய்து பல வருடங்களாகத் தடுத்து வைத்துள்ளனர்.

இதேபோன்று சிறைகளில் விசார ணைகள் இன்றி தமிழ் அரசியல் கைதி களாகப் பலர் உள்ளனர். ஆனால், பல குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ள அரசு, இந்த அரசியல் கைதி களை விடுதலை செய்யத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறது.

வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகள் தங்களது காணா மல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி வருடக் கணக்கில் தொடர்ச்சியாகப் போராடி வரு கின்றனர். ஆனால், அவர்களுக்கான நீதியை வழங்காது அரசு ஏமாற்றி வரு கின்றது.

அத்துடன் மலையகத் தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்வாதாரத்துக்காக ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கேட்டுப் போராடி வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.

இவ்வாறு தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்கள் உட்பட இலங்கையில் திட்டமிட்டு நடத்தப்படும் இன அழிப்பு நட வடிக்கைகளுக்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள், பல்சமய ஒன் றியங்கள் இணைந்து அனுப்பி வைக்கப் பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான கவன வீர்ப்பு போராட்டத்தை எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நடத்துவதற் குத் தீர்மானித்துள்ளோம்.

உரிமைகளை இழந்து நீதி மறுக்கப் பட்ட சமூகமாக வாழும் தமிழ் பேசும் மக் களாகிய எமது அவலக் குரல்கள் சர்வதேசத் தின் மனச்சாட்சிகளைத் தட்டும் அளவுக்கு எமது போராட்டத்தை அஹிம்சைவழியில் முன்னெடுக்க வேண்டியுள்ளதால் அனைத் துத் தமிழ் பேசும் மக்களையும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளு மாறு அழைப்பு விடுக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத் தரவேண் டும் என்ற கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி போராட் டத்துக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் தங்களது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

எனவே, அரசியல் கட்சிகள் உட்பட வடக்கு, கிழக்கில் உள்ள அனைவரும் மேற்படி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி கலந்துகொள்ளுமாறு வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களாகிய நாம் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுக் கின்றோம்.

- இங்ஙனம்

★வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள்.
★வடக்கு, கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம்
★அரசுசாரா தொண்டு நிறுவனங்களின் இணையம் - கிளிநொச்சி.
★கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசாரபீட மாணவர் ஒன்றியம்
★யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
★அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு
★சிவகுரு ஆதீனம் - யாழ்ப்பாணம்
★தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் - மட்டக்களப்பு
★மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பு - மட்டக்களப்பு
★மட்டக்களப்பு மாவட்ட பல் சமயங்களின் ஒன்றியம்
★மட்டக்களப்பு மாவட்ட முதியோர் அமைப்புக்களின் சம்மேளனம்
★தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு - மட்டக்களப்பு
★வெண்மயில் அமைப்பு - மட்டக்களப்பு
★தயா நிலம் அறக்கட்டளை - யாழ்ப்பாணம்
★குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் - முல்லைத்தீவு
★வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் - வவுனியா வடக்கு
★சமூகமட்ட அமைப்புக்களின் சம்மேளனம் - கிளிநொச்சி
★ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் - வேற்றுச்சேனை, வெல்லாவெளி, மட்டக்களப்பு
★தென்கைலை ஆதீனம், கன்னியா, திருகோணமலை
★தமிழர் மரபுரிமை பேரவை - முல்லைத்தீவு.

## ஆயிரம் ரூபாவைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் அரசில் இருந்து வெளியேற வேண்டும்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரு மான மனோ கணேசன் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதன உயர்வு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறி யவை வருமாறு:-

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுக்கொடுக் கப்படும் என்ற உறுதிமொழியை மலையகத்துக்கே வந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வழங்கினார். பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் வழங்கப்படும் எனக் கூறி னார். அமரர் ஆறுமுகன் தொண்டமா னும் அறிவிப்பு விடுத்தார். ஆனால், ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்ப டவில்லை. தொழில் அமைச்சர் தலை யிட்டும் எதுவும் நடக்கவில்லை.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் கனவுகூட அடிப்படை சம்பளம் ஆயிரம் ரூபா என்பதாகும். இறுதிக்கிரியைகளில் பங்கேற்ற ஆளுங்கட்சி பிரமுகர்கள், நிச்சயம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என உறுதியளித்தனர். அந்த உறுதி மொழி இன்னும் நிறைவேற்றப்பட வில்லை.

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக பிரதமர் முன்மொழிவு செய்தார். ஏதோ சம்பள உயர்வு கிடைத்துவிட்டது போல பட்டாசு கொளுத்திக் கொண்டாடப்பட்டது. எதுவும் நடக்கவில்லை. தற்போது சம்பள உயர்வுக்கான நடவடிக்கையை எடுக்கு மாறு தொழில் அமைச்சருக்கு, அமைச் சரவை பணித்துள்ளது. மாறாக இது சட்டரீதியில் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல.

எது எப்படி இருந்தாலும் அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப் படவேண்டும் என்பதே எமது நிலைப்பா டாகும். நல்லாட்சியின்போது மலையக மக்களின் உரிமைகளை வென்றெடுப்ப தற்கு நாம் பல நடவடிக்கைகளை எடுத் தோம். சம்பள உயர்வு விவகாரத்தில் விமர்சனம் இருக்கின்றது. அதனால்தான் இன்று எதிரணியில் இருக்கின்றோம். ஆளுங்கட்சியில் இருக்கும் இ.தொ.கா., சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அரசிலி ருந்து வெளியேற வேண்டும். இந்த அரசின் கீழ் பெருந்தோட்டப் பகுதிகளில் எதுவும் நடக்கவில்லை. அடிக்கல் மட்டுமே நடப்படுகின்றது. இ.தொ.காவின் வகி பாகமும் பூஜ்ஜியமாகும் - என்றார்.

# இந்திய மீனவர்களுக்கு மட்டக்களப்பில் அஞ்சலி!



மட்டக்களப்பு, ஜன. 29

இலங்கையின் கடல் எல்லையில் உயிரிழந்த நான்கு இந்திய மீனவர்களுக்கு கடந்த புதன்கிழமை மட்டக்களப்பில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் இலங்கை கடற்பரப்பில் உயிரிழந்த இந்திய மீனவர்கள் நான்கு பேருக்கும் மலர் மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அங்கத்தவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமையுடன் அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இங்கு உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் மட்டக்களப்பு மாவட்ட தேசிய அமைப்பாளர் த. சுரேஷ் கருத்து தெரிவிக்கையில் –

இந்திய இலங்கை எல்லையில் நடந்த துன்பியல் சம்பவத்தில் எமது தொப்புள் கொடி உறவுகளான நான்கு தமிழக மீனவர்கள் உயிரிழந்தமை என்பது ஏற்றுக் கொள்ள முடியாத சம்பவம்.

எம்மை பொறுத்தமட்டில் இதை ஒரு படுகொலையாகவே கருதுகின்றோம். ஏனென்றால் படகு விபத்துக்குள்ளாகி மீனவர்கள் உயிரிழந்தமை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. படகு விபத்துக்குள்ளாகி அந்தப் படகு கடலில் மூழ்கும் வரை இலங்கை கடற்படை என்ன செய்து கொண்டு இருந்தது.

இலங்கை கடற்படை, மீனவர்களைக் காப்பாற்ற முடியாத ஒரு திறமையற்ற கடற்படையாக இருந்ததா என்ற கேள்வி எழுகிறது. எனவே, இது தமிழக மீனவர்கள் தமிழ் மீனவர்கள் என்ற காரணத்துக்காகவே இவர்கள் படுகொலை செய்யப் பட்டிருக்க வேண்டும். எனவே, இந்த மீனவர்கள் உயிரிழப்புக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். – எனக் கூறினார்.

# சுதந்திர தினத்தில் மாபெரும் போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் அழைப்பு

சுதந்திர தினத்தில் மாபெரும் போராட்டத்துக்கு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் நேற்று (வியாழக்கிழமை) அழைப்பு விடுத்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி கறுப்புப் பட்டி அணிந்து மாபெரும் அடையாள உணவு ஒறுப்பு போராட்டத்தை ஆரம்பித்து எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கதலைவி யோகராஜா கனகரஞ்சினி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இடம்பெறும் மாபெரும் நீதிப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

# வடக்கு, கிழக்குக்கு ஆளுமையான ஆளுநர்களை ஜனாதிபதி நியமனம் செய்ய வேண்டும் - லோகநாதன்

வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு ஆளுமை, திறமை மிக்க புதிய ஆளுநர்களை ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ நியமிக்க வேண்டுமென அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்துள்ளார்.

காரைதீவில் கடந்த (புதன்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் எஸ்.லோகநாதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

பொதுநல, சமூக, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பல தீர்மானங்கள் எமது உயர்பீட கூட்டத்தில் எடுக்கப்பட உள்ளன.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பிற்பாடு புதிய ஆளுநர்கள் நியமிக்கப்படுகின்றமை வழக்கம். வடக்கு – கிழக்குக்கான தற்போதைய ஆளுநர்கள் ஆளுமை, திறமை அற்றவர்கள். எனவே, ஆளுமையான திறமையான ஆளுநர்களை இந்த மாகாணங்களுக்கு ஜனாதிபதி நியமித்துத் தர வேண்டும்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் எமது தொழிற்சங்கத்தின் போசகருமான டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சராக பதவி வகித்து வருகின்ற நிலையில் கிடைத்தற்கு அரிய இந்த வாய்ப்பு மூலமாக ,எமது மீனவ உறவுகளின் அன்றாட அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும்.

முறையற்ற இடமாற்ற உத்தரவுகள் காரணமாக எமது ஊழியர்கள் தற்போதைய கொரோனா காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வருடாந்த இட மாற்றம் என்கிற பெயரில் அவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு உள்ளது. நாடு வழமைக்கு மீள்கின்ற வரை இந்த இடமாற்ற உத்தரவுகளை பொது நிர்வாக அமைச்சு தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்க வேண்டும்.

ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கான உரிமை தற்போது முஸ்லிம் உறவுகளுக்கு மறுக்கப்பட்டு இருக்கின்றது. அரசாங்கம் இவர்கள் விடயத்தில் நடுநிலையாக சிந்தித்து சரியான தீர்மானத்தை எடுத்தல் வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தவறிவிட்டது

கைச்சங்கிலி ஒன்று 27.01.2021 அன்று 12.30 மணியில் இருந்து 14.30 மணிக்கிடையில் கச்சேரியடியில் இருந்து கச்சேரி நல்லூர் வீதியில் வந்து, நாவலர் வீதியால் திரும்பி, கஸ்தூரியார் வீதியால் திரும்பி, அரசடி வீதி, தட்டாதெரு சந்தியால் கே.கே.எஸ் வீதி பக்கம் திரும்பி, நாச்சிமார் கோவிலுக்கு இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து - 0753932608 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தரவும்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1992.11.18
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூரம்
செவ் - 2 இல்
பாவம் - 61 3/4
கல்வி - A/L
தொழில் - சுவிஸ் PR
எதிர்பார்ப்பு - சுவிஸ் வரவிரும்பும் பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1983.03.17
மதம் - இந்து V
நட்சத்திரம் - அச்சுவினி
சூ/செவ் - 9 இல்
பாவம் - 19 3/4
கல்வி - பட்டதாரி
தொழில் - விரிவுரையாளர் ஜமேக்கா
எதிர்பார்ப்பு - ஜமேக்கா வரவிரும்பும் பட்டதாரி மணமகன் தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் ⇨ 1000/=
077 8889388
075 3305500
070 3305500
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பள்ளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் முருகன் ஆலயம் முன்பாக நாவலர் வீதி, அரியாலை
தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்
நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்வி பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.
புதிய கல்வியாண்டு - 2021
வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு தரம் 1 முதல் தரம் 5 வரை வாராந்தம் பரீட்சைகளோடு
தமிழ் மொழி மூல வகுப்புகள் தரம் 6 முதல் O/L வரை
ENGLISH MEDIUM CLASSES GRADE 6 - O/L
இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும்
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன..
இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள்!
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"
077 5388471, 077 3126807, 021 222 9016

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.01.2021 இல் வெளியிடப்பெற்றது.

# தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் குருந்தூர்மலையில் காணாமல் போயின!

## பொலிஸ் நிலையத்தில் ரவிகரன் முறைப்பாடு



முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் இருந்த தமிழர்களுடைய வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன என முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அப்பகுதி கிராம மக்களின் சார்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) முறைப் பாடொன்றைப் பதிவுசெய்துள்ளார்.

அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் மீண்டும் அந்த இடத்தில் நிறுவவேண்டும் எனவும், தொடர்ந்தும் தமிழ் மக்கள் குருந்தூர் மலைக்குச் சென்று தமது வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும் எனவும் ரவிகரன் குறித்த முறைப்பாட்டினூடாகக் கோரியுள்ளார்.

மேலும் அவரது முறைப்பாடு தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

கடந்த 18.01.2021 அன்று முல்லைத்தீவு – தண்ணி முறிப்பு, குருந்தூர்மலைப் பகுதிக்கு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க படையினர் சகிதம் வருகைதந்து அங்கு தொல்லியல் அகழ்வுக்கான பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில், அங்கிருந்த முச்சூலம் உள்ளிட்ட தமிழர்களின் வழிபாட்டு அடையாளம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதாக ஊடகங்கள் மூலமாகவும், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அங்குள்ள மக்கள் மூலமாகவும் எனக்குத் தகவல் தரப்பட்டது.

அதேவேளை, குருந்தூர் மலைக்கு வழிபாட்டுக்குச் செல்லும் தமிழ் மக்களும் அங்கு செல்லவிடாமல் தடுக்கப்படுகின்றனர் எனவும் என்னிடம் கோவில் நிர் வாகத்தினர் முறையிட்டிருந்தனர் .

இந்நிலையில், மக்களின் இந்த முறைப்பாடுகளுக் கமைய குருந்தூர்மலை ஆதிசிவன், ஐயனார் கோவி லுக்கு இன்று (நேற்று) நாடாளுமன்ற உறுப்பினர்க ளான சார்ள்ஸ் நிர்மலநாதன், சிவஞானம் சிறீதரன், நானும், சில பிரதேசசபை தவிசாளர்கள், உறுப்பினர்க ளோடும் சென்றிருந்தோம்.

அப்போது மக்களால் முறையிடப்பட்டமையைப் போலவே, அங்கு சென்ற எங்களையே அங்கிருந்த இராணுவத்தினர் மலைப் பகுதிக்குச் செல்லவிடாது தடுத் திருந்தனர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், இதுதொடர்பில் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய நிலையில் குருந்தூர் மலைப் பகு திக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டோம்.

இதனைவிட ஆலயநிர்வாகத்தினர், ஊடகங்கள் வாயிலாக அறிந்ததைப்போலவே அங்கிருந்த தமி ழர்களின் வழிபாட்டுச்சின்னங்களும் அங்கிருந்து அகற்றப்பட்டிருப்பதையும் அவதானிக்கமுடிந்தது.

மேலும் கடந்த 10.09.2020 அப்பகுதி மக்களின் முறைப்பாட்டுக்கு அமைய குருந்தூர்மலைப் பகுதிக்கு சென்றபோது அப்போதும் அங்கு இருந்த தமிழர்களின் வழிபாட்டுச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்த இடத்தி லிருந்து இனந்தெரியாதவர்களால் காணாமல் ஆக் கப்பட்டிருந்தன.

அதேவேளை, கடந்த 01.10.2020 அன்று குமுழ முனைப்பகுதித் தமிழ் மக்கள் அங்கு பொங்கல் வழி பாடுகளை மேற்கொள்வதற்காகச் சென்றபோது, அமைக் கப்பட்ட இடத்திலிருந்து காணாமல் போயிருந்த தமி ழர்களின் வழிபாட்டுச் சின்னமான முச்சூலம், அருகே இருந்த காட்டுக்குள் உடைத்து வீசப்பட்டிருந்ததை அவ தானித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த சூலத்தினை எடுத்து ஏற்கனவே இருந்த இடத்தில் வைத்து அன்றைய பொங்கல் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக கடந்த 18.01.2021 அன்று அமைச்சர் வருகைதந்தபோது மீண்டும் அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டுச் சின்னங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தன என அறியமுடிந்தது.

இதிலே குறிப்பாக கடந்த 10.09.2020 நீதிமன்றில் இடம்பெற்ற இந்த குருந்தூர்மலை தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றில், தொல்லியல் திணைக்களம் குருந்தூர் மலையில் உள்ள தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்குப் பாதுகாப்புக் கோரியிருந்தது.

இந் நிலையில் நீதிமன்று தொல்லியல் திணைக்களம் கோரியதற்கமைய குருந்தூர்மலை வளாகத்தில் இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண் அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருந்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேதான் அங்கு பாதுகாப்புத் தரப்பினர் இருந்த நிலையில், அங்கிருந்த தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு அடையாளங்கள் இனந் தெரியாதவர்களால் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது.

இந் நிலையில் இவ்வாறு தமிழர்களின் பூர்வீக வழி பாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலே, இன்று (நேற்று) முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் அந்தப் பகுதிக் கிராமமக்களின் சார்பாக முறைப்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளேன்.

மேலும் குறித்த முறைப்பாட்டிலே, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் வழிபாட்டுச்சின்னங்கள் மீள நிறுவப்படவேண்டும் எனவும், அங்கு தமிழ் மக்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொடர்ந்து அனும திக்கவேண்டும்எனவும் கோரிக்கைகளையும் முன்வைத் துள்ளேன் – என்றார்.

# கல்முனை மாநகர சபையில் கை கலப்பு; அமளி துமளி!

## அமர்வை இடைநிறுத்திய முதல்வர் மண்டபத்தை விட்டு வெளியேற்றம்





கல்முனை மாநகர சபையின் அமர்வின்போது உறுப்பினர் களிடையே கைகலப்பு அமளி துமளி ஏற்பட்டமையால் மாநகர முதல்வர் சபை அமர்வை இடை நிறுத்திவிட்டு சபா மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தி னம் (புதன்கிழமை) மாலை 3 மணியளவில் மாநகர சபையின் சபா மண்டபத்தில் முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம். றக் கீப் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு அமர்வின்போது புதிய 2021ஆம் ஆண்டுக்கான நிலையியற் குழுக்களை நியமிப் பதில் முதல்வர் மற்றும் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக் கிடையில் ஆரம்பித்த வாய்த் தர்க்கம் எதிர்க்கட்சி ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு இடையே கைகலப்பாக மாறக்கூடிய நிலை உருவானது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஒருவர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் கதிரமலை செல்வராசா தனக்கு விரல் நீட்டி பேசினார் என்பதால் அவரை சபை அமர்விலி ருந்து வெளியேற்றுவதோடு தற்காலிகமாக சபை அமர் விலிருந்து இடை நிறுத்த வேண்டும் எனவும் அறிவித் தார்.

இதன் போது எதிர்க்கட்சி மற் றும் ஆளும் கட்சி உறுப்பினர்க ளுக்கு இடையில் வாதப் பிரதி வாதங்களும் கைகலப்பும் ஏற் பட்ட நிலையில் அங்கிருந்து மாநகர சபை உறுப்பினர் கதிர மலை செல்வராசாவை வெளி யேற்ற முற்பட்டவேளையிலேயே அங்கு கூச்சல் குழப்பம் பதற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ராஜன் (தோடம்பழ உறுப்பினர்), எம்.அசீம் (அகில இலங்கை மக் கள் காங்கிரஸ் உறுப்பினர்), அப்துல்மனாப் ஆகியோர் உட்பட குறித்த பிரச்சினையுடன் தொடர் புடைய தமிழர் விடுதலைக் கூட் டணி உறுப்பினர் கதிரமலை செல்வராசா ஆகியோர் ஊட கங்களுக்கு கருத்துத் தெரி வித்தனர்.

# நெல் அறுவடையிலும் பாரிய வீழ்ச்சி; கொள்வனவில் நியாய விலை இல்லை



கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக நெல் அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதோடு, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவும் நியாயமற்ற விலையில் மேற்கொள்ளப்படுகிறது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது காலபோக நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் பெரும் பாலான விவசாயிகளுக்கு அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சில விவசாயிகளுக்கு உற்பத்தி செலவைக் கூடப் பெற்றுக்கொள்ள முடியாதளவில் அறு வடை காணப்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, நெல் கொள்வனவில் ஈடுபடுகின்ற தனியார் நிறுவனங்களும் நியாயமற்ற விலை யில் கொள்வனவை மேற்கொள்கின்றனர் என வும், வேறு வழியின்றி விவசாயிகளும் கொள்வ னவாளர்களின் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர் எனவும் விவசாயிகளால் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

# ஹற்றன் பன்மூர் தோட்ட தொழிலாளியின் குடியிருப்பில் நாக பாம்பு கண்டுபிடிப்பு!



ஹற்றன் பன்மூர் தோட்டத்தின் தொழிலாளர் குடியிருப்பு ஒன்றின் அறையில் இருந்து நாக பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 அடிநீளமான இந்தப் பாம்பு அறையில் காணப்படும் கட்டு ஒன்றின் மீது காணப்பட்டுள்ளது.

இது சாரை பாம்பு என்று ஊகித்த வீட்டு நபர் அதனை பிரம்பு ஒன்றால் வெளியில் தள்ளிவிட முயற்சித்த போது அது தனது தலையை விரித்த நிலையில் அது நாகப்பாம்பு என்பதை அறிந்து நிலை தடுமாறியுள்ளார்.

உடனே தன்னை சுதாகரித்த அவர் தனது சகோதரனின் உதவியுடன் அந்த நாகபாம்பை ஒரு பிளாஸ்டிக் வாளியினுள் அதனை செல்ல செய்து பாதுகாப்பாகப் பிடித்துள்ளார்.

இந்த பிரதேசத்தில் நாகபாம்பு காணப்படுவதாக மக்கள் மத்தியில் நம்பிக்கை காணப்பட்டுள்ள போதும் இன்றே அதனை தாம் நேரில் கண்டதாக இப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இதனை பார் வையிட அதிகளவானவர்கள் இவரின் வீட்டுக்கு வருகை தந்தமையுடன் அவர்கள் நெருக்கமாக காணப்படும் தேயிலை செடிகளிடையே தாம் சென்று கொழுந்து கொய்வதற்கு தற்போது பயம்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் குளிர் காலநிலையில் இவ்வாறான விச பாம்புகள் காணப்படுகின்றமை மிக மிக அரிதான விடய மாக உள்ளதுடன் தற்போது நாகபாம்பின் குட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதானது இந்தப் பகுதி மக்களைப் பெரும் அச்சத்திற்குள் தள்ளியுள் ளது. பெரிய நாக பாம்புகளும் காணப்படக்கூடும் என்றும் அச்சப்படுகின்றனர்.

இது தொடர்பாக ஹற்றன் பொலிஸாருக்கும் வன ஜீவராசிகள் திணைக்கள காரியாலயத்துக் கும் அறிவித்த நிலையில் அவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தலுக்கு ஏற்ப இந்தப் பகுதிக்கான கிராம உத்தியோகத்தருடன் கலந்து ரையாடி மக்கள் நடமாட்டம் இல்லாத காட்டுப்பகுதி யில் இதனைப் பாதுகாப்பாக விடுவதற்கு வீட்டின் உரிமையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.